தென்மொழி

உரிமை ஒடுக்கமே விடுதலை முழக்கம்!

உரிமை ஒடுக்கமே விடுதலை முழக்கமாய்
உருவாகி வருவது திண்ணம் - இதற்கு
உரமிட்டு வளர்ப்பதே எண்ணம்! - இதைச்
சரிவர விளங்கிக் கொள்ளாத மக்களைச்
சார்பாக ஆக்குதல் வேண்டும்! - அதுதான்
சரிநிகர் உணர்வினைத் தூண்டும்!

வழிவழி யாய்வரும் மக்களை ஒடுக்கி
வாழ்வியல் உரிமையை அடக்கி - அவரை
வறுமையில் அடிமையில் முடக்கி - மதக்
குழிகளில் வீழ்த்திச் சாதியில் தாழ்த்திக்
கொன்று குவித்திடும் அரசு! - உடனே
கொட்டடா விடுதலை முரசு!

உலகெலாம் உரிமை முழக்கம் எழுந்தது!
உணர்ந்திடு! விழி! எழு! தமிழா! - உன்றன்
உயிரென்ன நீரினில் குமிழா? - உன
ஒண்டமிழ்த் தாய்மொழி, இனம், நிலம் யாவும்
உருக்குலைந் தழிவதோ, இந்நாள்? - நீதான
உலகைஆண் டவனடா முன்னாள்!

சிறுசிறு நலன்கள் சில்லறை உரிமைகள்
சிதைக்குமே உன்பெரும் நோக்கம்! - அவற்றால்
சிறக்குமோ, விடுதலை ஆக்கம்? - இனம்
உறும்பெரும் பயன்பெற உரிமையை மீட்பாய்!
ஒன்றுதான் உனதுயிர்க் கொள்கை! - என்றும்
உறுதிதான் தமிழ்நிலம் வெல்கை!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

அகவை : 21

ஓலை : 10

விலை 1-25 உருபா

நமக்கு வந்த மடல்கள்.

0 : 1090 : பெருந்தகையீர், வணக்கம். கடந்த இருபது அல்லது முப்பது ஆண்டுகளில் தமிழ்மொழியின் வளர்ச்சி வியக்கத்தக்க அளவில் நிகழ்ந்துள்ளது. இவ் வளர்ச்சியில் தென்மொழிக்கும், உங்களுக்கும் கணிசமான பங்குண்டு எனத் துணிந்து சொல்வேன். ஆனால், பள்ளிகளிலும் - கல்லூரிகளிலும் தமிழ்ப் பயிற்றுமொழி வகுப்புகள் சீந்துவாரற்று இருக்க, ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்புகளுக்கு இடம் கிடைக்காத அளவு போட்டி எனவும், இத்தகு ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்புகளில் இடம் கிடைக்க மலைக்கத்தக்க அளவில் கையூட்டு தரப்படுகிறதெனவும் அறிந்து வருந்துகிறேன்.

மொழி, நம் எண்ணத்தை-கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க உதவும் ஒரு கருவியே அன்றி வேறன்று. நம் தாய்மொழியில் தான் நம் எண்ண ஓட்டத்தைச் செப்பமாக வெளிப்படுத்த முடியும். இஃது மொழியறிஞர்கள் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளும் உண்மைக் கூற்றாகும்.

இதுபோலவே, நம் தமிழர் அறிவியல் அடிப்படையில் எதையும் சிந்திக்காததால் நம் மொழி, நலன், பண்பாடு, கலை மற்றும் சுற்றுப்புறம் இயற்கை வளம் ஆகியவற்றைப் பாழாக்கி வருகின்றனர்.

பகுத்தறிவுப் பகலவன் பெரியார் நம்மிடையே தோன்றி நம் பகுத்தறிவுக் கண்களைத் திறந்துவிட்டார். காமராசர் ஆட்சிக் காலத்தில் எல்லோரும் கல்வி கற்கும் நிலையும் வாய்த்தது. எனினும் நந்தமிழரில் மிகப் பலர் இன்னமும் அறிவியல் அடிப்படையில் சிந்திக்க வியலாமலே உள்ளனர்,

நம் சுற்றுச்சூழல் வளம் விரைந்து அழிக்கப்படுகின்றன, மரங்கள் வெட்டிச் சாய்க்கப்படுகின்றன. ஆம், அடுப்பெரிக்க இவை பயன்படுத்தப்படுகின்றன. வெட்டிச் சாய்க்குமளவுக்கு மரங்கள் மறுநடவு செய்யப்படுகின்றனவா என்றால் இல்லவே இல்லை. முப்பது ஆண்டுகட்கு முன்பு நீங்கள் பார்த்த ஓர் ஊரின் நிலையை அவ்வூர் இன்றுள்ள நிலைபை ஒப்பிட்டுப் பார்ப்பின் இவ்வுண்மை விளங்கும்.

மரங்கள் நமக்கு நிழல் தரவும், பகலில் உயிர்வளியை வெளியிட்டும் உதவுவதோடு (மா, பலா, வாழை, தென்னை போன்றவை நமக்குப் பெருமளவில் உணவுப்பொருட்களை நல்குகின்றன என்பது அனைவோரும் அறிந்ததே.) தூசு, ஒலி முதலியவற்றையும் கட்டுப்படுத்துகின்றன, பெரு மழை, வெள்ளம் ஆகியவற்றின் போது தரையின் சாரமுள்ள மேற்பகுதி அரிக்கப்படாமலும் தடுக்கவல்லனவை மரங்கள். மரங்கள் வெகு வேகமாக வெட்டிச் சாய்க்கப்படுதலால் உலகமெங்கணும் பாலை நிலம் மெள்ள மெள்ளப் பரவி வருவதாக அனைத்துலக மருத்துவக் கழகத்தாரும், அறிஞர்களும் குரலெழுப்பு

(... 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளவைக்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே"

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ்மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன் தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு ஆர் பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன்

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:21] ௨0௧௬ கடகம் (சூலை-ஆகத்து-85) [ஓலை-10

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில்

தூயதமிழ் அகரமுதலிப்பதிப்பாசிரியராக அருளி அமர்த்தம்! பாராட்டுகள்!



சென்ற சூலைமாத இறுதியில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், தூய தமிழ் அகரமுதலிப் பதிப்பாசிரியராகச் சொல்லாய்வறிஞர் அருளி அவர்கள் பதவியமர்த்தம் பெற்றுள்ளார்கள் என்னும் நல்ல செய்தி, தமிழுக்கு ஆக்கமான செய்தி, நம்மைப்பல்லாற்றானும் நிறைவுறச்செய்கிறது! அவ் வமர்த்தத்தைஏற்படுத்திய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தையும், அதன் துணைவேந்தர்

உயர்திரு. வ. ஐ. சுப்பிரமணியம் அவர்களையும் நாம் நெஞ்சு நிறைவுறப் பாராட்டுகிறோம். மகிழ்ச்சி. நன்றி!

உருவுகண்(டு) எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னார் உடைத்து. (667)

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ(டு) ஒழுகப் படும் (698)

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
அதனை அவன்கண் விடல் (517)

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)
எய்த உணர்ந்து செயல் (516)

— என்னும் இலக்கணங்களுக்கு இலக்கியமாக, அறிஞர் அருளி அவர்களின் பதவியமர்த்தம் நடைபெற்றிருப்பது, தமிழுக்கு நல்ல எதிர்காலம் அமையவிருக்கிறது என்னும் நம் நம்பிக்கையைமேலும் உறுதிப்படுத்துகிறது. அதற்காக மேலும் ஒருமுறை தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தரைப் பாராட்டி நன்றியுரை கூறு கின்றோம். அவரின் தமிழ் வளர்ச்சிக் கண்ணோட்டம் இதனால் தெளிவு பெறுகிறது. அவரின் செயல் துணிவுக்கு இஃதொரு வரலாற்றுச் சான்று.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும் (1046)

— என்பது தமிழ்மறை. பணம் உள்ளவர் பணக்காரராகத்தான் மதிக்கப்பெறுதல் வேண்டும். ஆனால், இக்கால் பணம் உள்ளவர் அனைத்து அதிகாரமும் படைத்தவராக, பேரறிஞராக மதிக்கப் பெறுதல் மிகவும் வருந்தத்தக்கது. 'அறிவுடை ஒருவனை அரச னும் விரும்பும்' என்பதெல்லா அக்கால முறைமை. இக்கால், பொருளுடை ஒருவனே யாவரினும் மேலாக மதிக்கப் பெறுகிறான். அவன் கருத்துகளே சட்டங்களாகவும், மந்திரங்களாகவும் மதிக்கப் பெறுகின்றன. இந்நிலைகளைத் தம் அணுகுமுறையால் மாற்றி, உண்மையறிவுக்கு ஏற்றம் கொடுத்துள்ளார் தமிழ்த் துணைவேந்தர். வாழ்க அவரது நெறி! வளர்க அவரது கொற்றம். இது நிற்க.

அண்மையில் அருளி அவர்களின் ஐந்து ஆராய்ச்சி நூல்கள் ஒரு சேர வெளிவந்திருக்கின்றன. 1982 பிப்ரவரி தொடங்கி, அக்டோபர் முடிய சென்னையில் உள்ள 'தமிழ், சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவன'த்தில் அறிஞர் அருளி ஆற்றிய', சொல்லாராய்ச்சிச் சொற்பொழிவுகளின் தொகுதி கள் அவை. ஐந்து நூல்களும் ஐந்து தங்கப் பேழைகளில் வைத் துள்ள ஒளிமணிக் கற்களாகும்! அவற்றைப் படிப்பார் அவற்றின் பெருமையை உணர்வார். இதுவரை எவராலும் செய்யப்பெறாத தமிழியல் விளக்கங்கள் அவை. மொழிநூற் கதிரவன், தமிழ்ப்புல

ஞாயிறு, ஞா. தேவநேயப்பாவாணரைத் துரோணராகக் கொண்டு தம் மொழியாய்வறிவை நனி வளர்த்துக் கொண்ட ஏகலைவன் அருளி! அவரினும் விஞ்சி அறிவியல் முறையில், ஏரணக் குன்றேறிச் செந்தமிழ் ஞாயிற்றின் சுடரொளியைக் கண்டு காட்டும் முயற்சியில், வீறுடைய வெற்றிப் புலம் புகுந்தவர் அருளி! இதை நடுநிலை திறம்பாக் கூர்த்த நல்லுணர்வினால், செந்நாப் பிறழாமல் நாம் கூறிவந்ததை இந்நூல்களின் வழி மெய்ப்பித்துள்ளார், அவர். அவரின் அஃகியகன்ற அறிவுக் கருவைத் தம் அகக் கரணத்தால் உய்த்துணர்ந்தே, நம் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் இவ்வரிய நல்வாய்ப்பைத் தமிழுக்கு ஏற்படுத்தித்தந்துள்ளார். அவர் அமர்த்திய பதவியமர்த்தங்களுள் அருளியின் பதவி யமர்த்தமே வரலாற்றுச் சிறப்புடையது என்னின் மிகையாகாது. இதுவும் நிற்க.

மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி' தமிழை ஆரியத்தினின்று மீட்டெடுக்கும் முயற்சியில் ஓரடி வைக்கும் முன்பே, தன் சீரடி குன்றிச் செல வழுங்கியது. அப்பொழுதே, நாம் அரசுக்குச் சொன்னோம். 'இச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் துறையை மாற்றித் தூய தமிழ் அகரமுதலித் துறையாகச் செய்து, அதற்கேற்ற வினைக்குரியானை நாடி, அத்துறையை மீட்டும் நடத்துவிக்கச் செய்தல்வேண்டும்' என்று. ஆனால், ஏனோ அரசு மனம் காய்ந்தது. வைக்கோல்மேல் படுத்த வறிய சுணங்கன்போல், அச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் துறையை இன்றும் அசையவிடாமல் இறுகப் பற்றிக் கொண்டு, வழிமறித்துக் கிடக்கும் ஓரிரண்டு தடைக் கற்களும், தமிழுக்கு வாய்த்த கடையடைப்புகளே தவிர வேறில்லை. அவர்களால் செய்து முடிக்கப் பெறவேண்டிய அரும்பணி இன்று, தமிழ்ப் பல்கலைக் கழகத்தால், அருளியின் கைகளில் ஒப்படைக்கப் பெற்றுள்ளது. எனவே, அருளி அவர்களுக்குப் பொறுப்பும், உழைப்பும் அளவிறத்தன. பிறர் அவரின் ஆய்வு மதிப்பீட்டில், நிறைவு பெறுது நிற்கும் அவரின் இளமைப் பருவமே, இவ்வாய்ப் பணிக்கேற்ற வளமைக் கூறுகவும் வாய்ப்பாகவும் கொண்டு, தாம் ஏற்றுக்கொண்ட பனிமலையன்ன, நனிபெரும் பொறுப்பை நன்கு நடத்தவேண்டும் என்றுஅறிஞர் அருளி அவர்களை நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகின்றோம்.

> *கொளப்பட்டோம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்*
> *துளக்கற்ற காட்சி யவர்.* (699)

> *நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்*
> *முந்து கிளவாச் செறிவு.* (715)

என்னும் பேரறிவின் நிறைவுரைக்கேற்ப, துளக்கற்ற காட்சியையும் (அசைவற்ற நிலையான அறிவையும்), முதுவருள் முந்துகிள

வாச் செறிவையும் தம்மின் மிக்காரிடத்து, (விரைவாலும் தம்மை இறப்ப மதிப்பதாலும்) முற்பட்டு ஒன்றினைச் (சடக்கெனக்) கூறாத அடக்கத்தையும் கொண்டு, கருமமே கண்ணாயினராகத் தம்மிடத்து ஒப்படைக்கப்பெற்ற அப்பெரும் பணியால், தமிழும் தமிழரும் தமிழ்நிலமும் அடிமை நீக்கம் பெற்று, உரிமை ஆக்கம் உற்றுத் துலங்கவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன், வினையாற்றி விறல் நாட்டவேண்டும் என்று விழைகின்றோம்.

இனி, அவர் எடுத்துக்கொண்ட பெரும்பணிபற்றிப் பொது நிலையாக ஒரு சில குறிப்பிட விரும்புகின்றோம்.

அருளி அவர்கள் இக்கால் ஏற்றிருக்கும் பொறுப்பு,' **தூய தமிழ் அகரமுதலி'**யின் வெளியீட்டுப் பணி. முறைப்படி, **பாவாணர்** அவர்கள் தாம் செய்யவிருந்த **'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி'**யினும் செய்திருக்க வேண்டியது இவ்வகர முதலியே! இப்பொழுதுள்ள தமிழ் அகரமுதலிகள் அல்லது அகராதிகள் அனைத்தும் அல்லது ஒன்றேனும் தமிழுக்குரிய அகரமுதலிகளாக இல்லாமல் இருப்பது, தமிழ்மொழிக்கு நாம் ஏற்படுத்தியுள்ள ஒரு பெருங்குறை. ஓர் உலக முதன்மொழியாகவும், இலக்கிய, இலக்கண வழக்குச் செம்மொழியாகவும் உள்ள நம் அருந்தமிழ் மொழிக்கு இருக்கும் இக் குறைபாட்டுக்காகத் தமிழ்மொழியை வளர்ப்பதாக வும், அம்மொழியால் பெருமைப் படுவதாகவும் கூறிக்கொள்ள விரும்பும் நாம், இத்தனைப் பல்கலைக் கழகங்களையும், பேராசிரியர் களையும் வைத்துக்கொண்டு, இதற்கொரு சிறந்த அகரமுதலியை இதுவரை உருவாக்கவில்லை என்றால், நாம் கொண்டாடும் பெருமையில் என்ன பொருள் இருக்கிறது? அறிஞர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகின்றோம்.

இப்பொழுது தமிழ்மொழியின் அனைத்து நிலைகளுக்கும் அதிகார முழுமையாக உள்ள, சென்னைப் பல்கலைக் கழகப் பேரகர முதலி, பெயரளவில் ஒரு தமிழ் அகராதியே தவிர, பயனளவிலும், தமிழின் பெருமையளவிலும், ஓர் ஏனைதானோ அகரமுதலியே! அதில் உள்ள சொற்களில் முப்பது விழுக்காட்டுச் சொற்கள் தமிழ் இல்லை.

இசுமு, இத்தத்து, இத்தா, இத்திகாத்து, இத்திகாபு, இத்திபார், இந்திலா, இதிபாரா, இந்துவி, இப்பா, இபாதத்து இபாரத்து, இபுதார், இபுனு, இஜ்ஜத்து இஜாபா, இஜார்நாமா, இக்கு, இஷ்பிஸ்கால், இஸ்தவா, இஸ்திக்பார், இஸ்திலாக்கு, இஸ்ஸா, டக்கு, டயன், டீ, புலின், பத்தாந்து, அசப்பியம் அசனபண்ணி, ரக்தீஷ்டீலி, ஜஹதஜஹல்லக்ஷணை, ஸ்டாடிகஜரூபா குஸமெம், ஜிஹ்வா, ராக்குடி, ரூப்பு, ஜிராயத்து முதலிய இச் சொற்கள் தமிழோ, தமிழ்நாட்டில் வழக்கிலுள்ள சொற்களோ அல்ல. இவற்றையெல்லாம் நம் பல்கலைக் கழகப் பேரகர முதலி

யில் தொகுத்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் நோக்கம் என்ன வாக இருக்கமுடியும் என்று தெரியவில்லையா? இந்த அகராதி தொகுக்கத்தான் 1913 முதல் 1939 வரை 27 ஆண்டுகளை எடுத்துக் கொண்டுள்ளது, தமிழ்க்கெடுப்பார் திரு. வையாபுரியாரைத் தலைவராகக் கொண்டு இயங்கிய பேராசிரியர் குழு. அதற்கான செலவு உருபா 4,10,100(உருபா நான்கு இலக்கத்துப் பத்தாயிரத்து நூறு). எவ்வளவு பெரிய பொறுப்புள்ள பணியை, எத்தனை உருபாக்கள் செலவிட்டு, எவ்வளவு காலத்தை எடுத்துக்கொண்டு எத்துணைத் தாழ்ச்சியாக, இழிவாகச் செய்திருக்கிறார், பாருங்கள்! இதனால், தமிழ்மொழிக்கு எத்துணை இழுக்கு! எவராகிலும் இந்த அழிம்பைக் கேட்டார்களா? பாவாணர் ஒருவரே இதனைக் கண்டு காட்டித் தட்டிக் கேட்டார். இனி, 'தட்டிக் கேட்க ஒருவரும் இல்லையானால் தம்பி, சண்டைப் பிரசண்டன்' என்பது போல் தமிழ் நாட்டில் 'தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்' என்னும் பாணியில், எல்லாரும் தமிழை வளர்ப்பதாகப் பீற்றியவாறு பிதற்றித் திரிகிறோம்.

அறிஞர் அருளி இதையெல்லாம் நன்கு உணர்வார்; உணர்ந்துள்ள அவர், எய்தற்கரிய பணியை ஏற்றுள்ளார்.

எய்தற் கரிய(து) இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல் (489)

என்னுமாறு போல,

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் (494)

என்னும் திருவுரைக்கொப்ப, அவர் ஏற்றுள்ள பணியைப் பலகாலும் எண்ணித் திட்டமிட்டு, வகுத்துக் கொண்டு, தக்காரைத் துணையாக அமர்த்தி, வன்மையாகவும், திண்மையாகவும், நுண்மையாகவும் ஒண்மையாகவும், செய்து முடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இக் கேட்பாடு முன்னுரை தான்! இனி, பணி தொடரத் தொடர அவ்வக்கால் சிற்சில பாங்கு நிலைபற்றியும் பின்னுரைப்போம். அவற்றையெல்லாம் உணர்ந்து ஆற்றின் அடங்கி இந்நல்வினையைப் போற்றிக் கொள்ளுதல் வேண்டும். அஃதவர் கடமையாகும். அவர் பணியாலும் துணை வேந்தர்தம் தோன்றாத் துணையாலும், என்றும் உள்ள நம் இன்றமிழ் நின்றொளி நிலவுவதாக! — பெருஞ்சித்திரனார்

[அண்மையில் வெளிவந்துள்ள அறிஞர் அருளியின் சொல்லாய்வு நூல்களின் நெடிய மதிப்புரை விரைவில் தென்மொழியில் வரும்.]

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல்,எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம். — அமைச்சர்.

சிங்கள வெறியர்களால் கற்பழிக்கப்பட்ட

ஒரு தோழியின் கடிதம்!

அன்பிற்கினிய தோழிக்கு,

உன் கடிதம் கிடைத்தது. சிங்களப் படைவெறியர் என்னைக் கற்பழித்ததாகச் செய்தித்தாள் செய்தியைப் படித்து நீ பதறியதாக எழுதியிருந்தாய். நடைபெற்ற நிகழ்ச்சியை அரசுத் தலைவருக்கும் இதழ்ச் செய்தியாளர்களுக்கும் நான் தெரிவித்திருக்கக்கூடாது என்பது உன் கருத்து. என் மானம் மட்டுமன்று, குடும்ப மானமும் போய்விட்டது என்று வருத்தம் தெரிவிக்கிறாய். என் கணவர்கூட மற்றவர் முகத்தில் எப்படி விழிக்கப் போகிறார் என ஏங்கி எழுதுகிறாய்.

நீ என்னோடு ஐந்து ஆண்டுகள் வரை கல்லூரியில் படித்து, உற்ற தோழியாய் நெருங்கிப் பழகி, பெண் விடுதலை, சமஉரிமை பற்றியெல்லாம் இரவும் பகலும் தருக்கமிட்ட பின்னரும் 'கற்பழிப்பு' என்பது பற்றி வழக்கமாக எம் குமுகத்தில் கூறப்பட்டு வரும் கருத்தையே நீயும் இறுகப்பிடிக்க முயல்வதே எனக்கு வருத்தம் தருகிறது.

இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தக் குமுகாயத்தில் ஒரு பெண்ணாக நீ வாழ்ந்துவிட்டாய். அகவை வந்த பெண்ணாக பன்னிரண்டு ஆண்டுகள்; திருமணமாகி நாலு ஆண்டுகளில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விட்டாய். உன்னிலும் பார்க்க நான் ஆறு மாதமே மூத்தவள். ஒரு குழந்தையே போதுமென நான் நிறுத்தி விட்டேன்.

என் கணவரின் முன்னிலையிலேயே சிங்களப் படைவெறியர் என்னைக் கற்பழித்தனர் என்பது பெரிய செய்தி மட்டுமன்று, கொடுமையான செய்தியுமாகும். ஒரு தமிழ் ஆண் மகனின் மானத்தையும் வீரத்தையும் ஆய்வுசெய்யும் கொடிய நிகழ்ச்சி இது. அன்று வந்த இரு படையினர் கையிலும் எந்திரத் (துப்பாக்கி) துமுக்கி. விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் சாப்பாடு போட்டதாகக் கூறி அவரை அடித்து உதைத்தனர். அவருடைய கைகளைப் பின்புறமாக மடக்கிப் பிடித்து ஒருவன் மூடு அணிந்த காலால் முதுகிலே உதைத்தான். குப்புற விழுந்து வாயில் அரத்தம் வழிந்தது. அதன் பின்னரே மயக்க நிலையில் மரத்தோடு கட்டினர். துமு(துப்பா)க்கியால் மீண்டும் அடித்து வயிற்றிலும் உதைத்தனர்.

என் அரத்தமெல்லாம் உறைந்துவிட்டது. இந்தக் கொடுமைகளைப் பார்க்க முடியாது சோர்ந்து இருந்துவிட்டேன். அதன் பின்னரேமே என்மேல் வலுத்தாக்கம்(பலாத்காரம்): ஒருவன் மாறி மற்றவன்.

'கற்பழிப்பு" என்று இந்த நிகழ்ச்சியைக் கூறுவதை நான் விரும்பவில்லை. இது என்மேல் காட்டப்பட்ட வலுத்தாக்கம் (பலாத்காரம்) என்றே இதை நான் கருதுகிறேன். என் கணவர் மேல் காட்டப்பட்ட தாக்க (பலாத்கார)த்திற்கும் இதற்கும் அதிக வேறுபாடு இல்லை. என்னைப் பொறுத்தவரை அவருக்கு நடந்ததே மிகக் கொடுமையானது எனக் கூறுவேன்.

என் கணவர் என்னைத் தம் சொத்தாகவும் என்னைக் காப்பாற்றுவது தம் கடமை எனவும் எண்ணியிருக்கலாம். அவரைக் காப்பாற்றவேண்டியது என் கடமையில்லையா? என்றால் அவ்வேளை அவருக்கு ஒரு வகையிலும் உதவமுடியவில்லை. அதுவே என் கவலை. அதேபோலவேதான் அவரது நிலையும் இருந்தது. இரக்கம் அவரால் அந்நிலையில் என்ன செய்ய முடியும்?

என்மேல் காட்டிய வலுத்தாக்கம் (பலாத்காரம்) மூலம் வெறியடங்கி, மூச்சிழுத்த அந்த நாய்கள் சிங்களத்தில் ஏதோ கத்திக்கொண்டு சென்றன. அவ்வேளை அவர்களை என்னால் உதைத்துத்தள்ளி விடமுடியும். ஆனால் நான் எதுவும் செய்யவில்லை. என் கணவரின் உயிர்; உள்ளே தூங்கிக் கொண்டிருந்த குழந்தை ஓடிவந்து திகைத்தபடி பார்த்துக் கொண்டு நின்றான். அவனுக்காகவும் அஞ்சினேன். நாய்கள் கடித்தால் நாம் திரும்பக் கடிக்கிறோமா ?

கற்பு, கற்பழிப்பு என்றெல்லாம் மிகவும் தீவிரமாகப் பேசப் படுவது வெறும் பொய்ம்மையான கற்பனைகளை உருவாக்கிவிட்டுப் பின் நாமே அவற்றை வழிபடுவது போலவே தோன்றுகிறது. ஆண்கள் பெண்கள்மேல் காட்டும் வலுத்தாக்கத்தை எம்மால் தடுக்க முடியாதபோது, நாம் என்ன செய்யமுடியும்? இது எம்முடைய தவறு? நீயே எண்ணிப்பார். ஒரு பெண்ணின் விருப்பமின்றி ஓர் ஆணால் பாலுறவில் இன்பமடைய முடியுமா? அவன் வேண்டுமாயின் தன் பாலுணர்வெழுச்சியால் ஏற்படும் வெறியைத் தீர்த்துக் கொள்ளமுடியும். அது எம்மை வருத்துவது அல்லது துன்பம் தருவது என்று மட்டும் கூறிக்கொள்ளலாம்.

என் கணவர் முழுநேரமாக சழவிடுதலை இயக்கத்தில் பணியாற்றச் சென்றுவிட்டார். என் மகனை வளர்க்கும் பொறுப்பில்லாவிடில் நான்கூடச் சென்றிருப்பேன்:

தமிழ்த் திரைப்படத்தில் காட்டப்படுவதுபோல நான் தற்கொலை செய்யின் அதனால் எதிரியே வெற்றி பெறுவான். என் குழந்தை, என் கணவர் நிலை என்னாகும்?

பெண்ணாகப் பிறந்த ஒவ்வொருத்தியும் பல்வேறு வகையாக வலுத்தாக்க (பலாத்கார)த்திற்கு உட்படுகிறாள். ஆணுலகக் குமுகாயத்தில் நாம் குறைந்தவர்களாக எண்ணப்படுகிறோம். தனிமையில் அல்லது வாய்ப்புக் கிடைத்ததும் ஆண்கள் துன்புறுத்த முயலுகின்றனர். கல்லூரியில் நாம் இவற்றைப் பார்க்கவில்லையா? இப்பொழுது திருவிழாக் கூட்டங்கள்; உந்துகள், தொடர்வண்டிகள், திரைப்படக் கொட்டகைகளில் இவ்வலுத்தாக்க முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குடும்பங்களுக்குள்ளே, உறவினரே சூழலும், வாய்ப்பும் கிட்டிய வேளைகளில் பெண்களின் விருப்பமின்றி வலுக்கட்டாயமாகத் தம் பாலுணர் வெழுச்சியைத் தீர்த்துக்கொள்ள முயலுகின்றனர்.

உன்னைக் கல்லூரியில் கண்டு பழகுமுன் ஒருமுறை விடுமுறையின்போது அக்காவிடம் கொழும்புக்குச் சென்று மூன்று கிழமைகள் தங்கியிருந்தேன். அத்தான் என்னோடு மதிப்பாகப் பழகினார். அக்கா வெளியே சென்றிருந்தவேளை அவர் என்மேல் தன் வலுக்

கட்டாயத்தைக் காட்டினார். இதை நான் எப்படி வெளியே சொல்லி எல்லாரின் வாழ்க்கையையும் சிதறடிக்க முடியும்?

என் கணவரே நான் நோயாக அல்லது வீட்டுவேலைகளினால் சோர்வடைந்து படுத்திருக்கும்வேளை, திருமணம் மூலம் உரிமம் பெற்றவராக என் விருப்பம் இன்றியே பலதடவை தம் வலிவை என்மேல் செலுத்தியுள்ளார். (அதேபோல, நான் ஆர்வமாக அணைக்கச் செல்லும் வேளைகளில் உதறித் தள்ளியிருக்கிறார்) இவற்றையெல்லாம் நான் வெளியே சொல்லவில்லை. இவை எல்லாப் பெண்களுக்கும் ஏற்படும் பட்டறிவுகளே. அவர்களது அடிமைத்தனம் தீராததாலும் குமுகத்தில் வாழவேண்டியிருப்பதாலும் வெளியே எதையும் எவரும் கூறவிடுவதில்லை.

ஆனாலும் என்மேல் சிங்களப் படைவெறியினர் காட்டிய வலுத்தாக்கம் எம் இனத்தின்மேல் காட்டிய வஞ்சகமாகும். இதை நாம் மூடிமறைத்து விடமுடியாது. தம்முடைய கருவி வலிவையும் அரசக் கொடுமைகளையும் வைத்து நடத்தப்பட்ட துன்புறுத்தல். என்னுடைய விருப்பமின்றி, எம்முடைய இயலாமையைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட கொடுமை. இது மாந்த உரிமை மீறல் என்ற ஒன்றிய நாடுகள் அவையின் உலக அறமுறை நெறிமுறைக்குள்ளும் அடங்கும்.

சிங்களப் படைத்துறையினரின் கொடுமைகளுக்கும் வலுத்தாக்கத்திற்கும், கொலைகளுக்கும்பெண்களும்ஆளாகிவருகின்றனர். இதை எதிர்த்துப் போராட எல்லோரும் முன்வரத் தயங்கலாம். ஒரு சிலராவது முன்வராவிடின் அனைத்துலகக் குமுகத்திற்கு அவர்களது 'பாசிச' இனவெறி வல்லாளுமை ஆட்சிபற்றி வெளிப்படுத்த முடியாது.

எம் இளைஞர்களைச் சிறைகளிலே உருச்சிதைவு செய்கின்றனர். தலைகீழாகத் தொங்கவிட்டுக் கம்பிகளால் அடிக்கின்றனர். துமுக்கி முனைகளால் குத்துகின்றனர். உடலின் மென்மையான பகுதிகளில் வெண்சுருட்டால் சுடுகின்றனர். அவர்களது ஆண்மையை அழித்து விடுகின்றனர். இப்படி எத்தனையோ கொடுமைகள் நடைபெறுகின்றன. இளைஞர்களுக்கு நடப்பது போன்று பெண்கள் மேல் அவர்களின் விருப்பமின்றிக் கற்பழிப்புச் செய்வதும் மாந்தக் கொடுமையே!

இவ்வாறு நடைபெறும் அவலங்களையும் கொடுமைகளையும் நாம் உலகக் குமுகத்திற்கு எடுத்துக்கூறி நயன்மை கேட்க வேண்டும். அத்தகைய நிலைப்பாட்டையே நான் எடுத்துள்ளேன். அதற்காக நீ வருந்தத் தேவையில்லை. வேண்டுமாயின் நீயும் என்னோடு இணைந்து கொள்ளலாம். இவ் விடுதலைப் போராட்டத்துடனேயே பெண்ணினத்தின் விடுதலையும் இணைந்துள்ளது. நாம் விடுதலை பெற்று எம்மை அடிமைப்படுத்தியிருந்த தவறான கருத்துகளையெல்லாம் தூக்கி எறியவேண்டும். பெண்ணினத்தின் வாழ்க்கை அடிமைத்தனத்தோடு பிறந்ததில்லை; அடிமைத்தனத்தோடு முடியப் போவதுமில்லை.

உன் அன்பான தோழி

நன்றி: 'புதிய மனிதன்' (சூன்-'87)

1. நூல்: பட்டுக்கோட்டையின் பாட்டுத்திறம்

ஆசிரியர் : செம்பியன்.

வெளியீடு : திங்கள் பதிப்பகம்,
1/170, எச் நெடுஞ்சாலை, மேலப்பாதி,
கீழையூர் வழி, மயிலாடுதுறை வட்டம், 609304

பக்கம் : 228; விலை : 12 உருபா.

இந்நூல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களைப் பாரதியாரோடும், பாரதிதாசனோடும் ஒப்பவைத்து ஆராயும் ஓர் ஒப்பீட்டு ஆய்வுநூல். இந் நூலுக்கு, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பேராசிரியர் பார். க. கைலாசபதி அவர்களின் அணிந்துரையும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியத் துறைப் பேருரையாளர் பார். பொன். கோதண்டராமன் அவர்களின் சிறப்புரையும் வழங்கப்பெற்றுள்ளன.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஏறத்தாழ 55 திரைப் படங்களுக்குப் பாடல்கள் எழுதிய திரைப்படப் பாடலாசிரியர். திரைப்படங்களில் ஒலித்தாலும், அவரின் பாடல்கள் இலக்கியத் தரம் வாய்ந்தவை. மக்கள் உள்ளத்தில் அளாவிநிற்கும் திறம் சான்றவை. இந்த வகையில், பாரதியாரின் பாடல்களுக்கும், பாரதிதாசனின் பாடல்களுக்கும் இருக்கின்ற இலக்கியத் தகுதிச் சிறப்புடன் அவை ஒப்பிட்டு ஆயப்பெறும் வலிமை பெற்றவை.

'பாரதியையும் பாரதிதாசனையும் கல்யாணசுந்தரத்தையும் ஒப்புநோக்கி ஆராய்வதன் மூலமாகவே, மூவருக்குள்ள பொதுப் பண்புகளையும் அவரவர்க்குரிய தனித்தன்மைகளையும் ஓர்ந்தறிதல் இயல்வதாகும். நூலிலே தரப்பட்டிருக்கும் ஒப்புமைப் பகுதிகள் பொருள்விளக்கமும் மொழிவிளக்கமும் தருகின்றன. பட்டுக் கோட்டை பாரதி, பாரதிதாசன் இருவரிலுமிருந்து வேறுபடும் தன்மையையும் நுட்பத்தையும் இவ் வொப்புமைப் பகுதிகள் பிழம்புருவாகக் காட்டுகின்றன'—என்பது கைலாசபதி அவர்களின் கருத்தாகும்.

'பாரதி, பாவேந்தர் ஆகிய இருவரிடமும் நாம் காணும் பல சிறப்புக் கூறுகள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரிடம் இனிய முறையில் இணைந்து விளங்குவதை ஆசிரியர் ஆராய்ச்சி நோக்கோடு நமக்குப் புலப்படுத்துகிறார்'- என்பது பொற்கோவின் மதிப்பீடாகும்.

பாரதியை விட மக்களுக்கு நெருக்கமான சொற்களாலும் அப்பட்டமான கருத்துகளாலும் பாரதிதாசன் இலக்கியத்தைக்

கையாண்டவர் என்றால், இனி, பாரதிதாசனை விட மிகவும் எளிமையான சொற்களிலே வலிமையான கருத்துகளை, மக்களுக்காகவே படைத்துக் கொடுத்தவர் கல்யாணசுந்தரம். அவரின் பல பாடல்கள் மக்கள் மனத்தில் பளிச்சென்று உறைப்பவை. இதனாலேயே அவர் 'மக்கள் பாவலர்', 'பாட்டாளி இனப் பாவலர்', 'முற்போக்குப் பாவலர்' என்றெல்லாம் மக்களால் பாராட்டுப் பெறுகிறார்;

> "கையிலே வாங்கினேன்
> பையிலே போடலே
> காசுபோன இடம் தெரியலே"
>
> "இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால்
> பதுக்கிற வேலையும் இருக்காது
> ஒதுக்கிற வேலையும் இருக்காது"
>
> 'வேப்பமர உச்சியில் நின்னு பேயொன்னு ஆடுதுன்னு
> விளையாடப் போகும்போது சொல்லிவைப்பாங்க,-உன்
> வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க
> வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை
> வேடிக்கையாகக்கூட நம்பிவிடாதே—நீ
> வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து வெம்பிவிடாதே'

— போன்ற அவரின் பாடல்கள் எத்துணை எளிமையும் வலிமையும் வாய்ந்த சொற்களால் திகழ்கின்றன.

'பாரதியினும் மேலாக ஏழை நிலையினை எடுத்துச் சொல்லும் ஆற்றல், உணர்த்தும் திறம், எளிமை ஆகியவற்றைப் பட்டுக்கோட்டையின் பாடல்களில் ஒருங்கே காண்கிறோம்' என்கிறார் திறனாய்வாளராகிய நூலாசிரியர். (பக் 77)

பட்டுக்கோட்டையையும் பாரதிதாசனையும் ஆசிரியர் ஒப்பிட்டுப் பேசும் பகுதி நம்முடைய சிந்தனைக்குரியது.

'பாவேந்தனுக்குக் கிடைத்த நீண்ட நெடிய வாழ்க்கை (73 ஆண்டுகள்) பட்டுக்கோட்டைக்குக் கிடைக்கவில்லை. புரட்சிக் கவிஞருக்குப் பின்பிறந்து, முன்பு இறந்து முழுமை பெற்றவன். ஆனால் பாவேந்தன் எட்டிப் பிடிக்காத தத்துவப் பாடல்களைப் பட்டுக்கோட்டை தொட்டுள்ளான். அதில் அவன் சமகாலக் கவிஞர் அனைவரையும் வென்றான் என்றே அறுதியிட்டுரைக்கலாம். பட்டுக்கோட்டையின் பாடல் தொகுதியில வெளியாகியிருக்கும் பாடல்கள் அனைத்தும் ஒன்பதாண்டுகளுக்குள் (1951-59) பாடப் பட்டவை. பாவேந்தன் ஐம்பதாண்டுகள் பாடியிருக்கின்றான். பட்டுக்கோட்டை குறுகிய காலத்தில் குறைந்த பாடல்களுக்குள் பெரிய சாதனையைப் புரிந்திருக்கின்றான் என்றே உரைக்க வேண்டும். இரண்டு கவிஞரும் பொதுவுடைமை, கரண்டல், புரட்சி, காதல், உழவர் நிலை, தொழிலாளர் நலம் ஆகியவற்றில் ஒரே சமுதாயப் பார்வை உடையோராயிருந்தனர். எங்கெங்குப் பாரதியுடன் ஒத்துப்போக முடியவில்லையோ, அங்கிங்குப் பாவேந்தனுடன் பட்டுக்கோட்டை ஒன்றுபட்டுள்ளான். ஓர் இலக்கியக் கணக்கினை நாம் உருவாக்க வேண்டுமென்றால்,

பாரதி + பாவேந்தன் = பட்டுக்கோட்டை.

— என்று குறிப்பிடவேண்டும். எனினும், பாரதி பாவேந்தன் ஆகியோரிடம் காணப்படும் ஒருசில கூறுகளைக் கழித்துக்கொண்டு கூட்டவேண்டிய நிலையும் உண்டு. அப்படிச் சரியாகக் கணக்கிட்டால்,

(பாரதி — ஆத்திகம்) + (பாவேந்தன் — திராவிடநாடு)
= பட்டுக்கோட்டை.

— என்று கொள்ளவேண்டும். பாரதி ஒரு நெடுஞ்சாலை எனின், பாரதிதாசன் கைகாட்டி; அந்தக் கைகாட்டியின் உதவியுடன் பாட்டாளிகளின் வீடுகளுக்கு நடந்தவன் பட்டுக்கோட்டை. (பக் : 124-125)

நூலாசிரியரின் இம் மதிப்பீடு சரியாக இருக்கலாம்; அல்லது தவறாகவும் இருக்கலாம். ஆனால் இதில் ஓர் உண்மையை நாம் ஆசிரியரோடு சேர்ந்து காணத் தவறிவிடக் கூடாது. ஆசிரியரின் இக் கூற்றில் நடுநிலைமையும் உள்ளது; உண்மையும் உள்ளது. அவை பட்டுக்கோட்டைக்கு ஏற்றந்தரக் கூடியது என்பதை விட, அவரைச் சரியான நிலையில் நின்று மதிக்கத்தகுந்தது என்று கொள்ளவேண்டும். பாரதியும், பாரதிதாசனும், பட்டுக்கோட்டையும் மூன்று நிலைகளில் நின்று மக்களை அறிந்து மக்களுக்காகச் சிந்தித்து, அவரவர்களின் போக்கிலே அவரவர்கள் பெற்ற உணர்வுகளை வெளிப்படுத்தியவர்கள். அவர்களிடையே ஏற்றத் தாழ்வுகளைக் காண்பது திறனாய்வாளரின் நோக்கமன்று. அவர்களின அகல உயரங்களைச் சரியாக மதிப்பிடுவதே சிறப்பான பணியாகும். அப் பணியை நடுநிலை நின்றே, வெறுப்பு விருப்பின்றி நமக்குக் கண்டு காட்டுகின்றார் இந் நூலாசிரியர். அதில் அவர் பெருமளவுக்கு வெற்றியும் பெற்றிருக்கின்றார் என்றே தோன்றுகின்றது. இதுபோல பல இலக்கியத் திறனாய்வு நூல்களை நாம் இந் நூலாசிரியரிடத்திலிருந்து எதிர் பார்க்கிறோம். காலமும் முயற்சியும் அவருக்குக் கை கொடுக்க வேண்டும் என்று வாழ்த்துகிறோம். இலக்கியச் சிறப்புகளை ஆயும் மாணவர்கள், ஆசிரியர்கள் இந் நூலாசிரியர் போன்றவர்களை ஊக்குவித்தல் கடன்.

நூல் : 2. அருண்மிகு சங்கர ராமேசுவரர்
கொன்றை விடு தூது. (பாடல் நூல்)

ஆசிரியர் : அருட்கவி சானகிநாதன் க.மு.,

வெளியீடு : நூலாசிரியர், 20, வடக்குராசரசத் தெரு, தூத்துக்குடி.

பக்கம் : 20. விலை : குறிக்கப்பெறவில்லை.

தூத்துக்குடி அருண்மிகு சங்கர ராமேசுவரர்மீது பாடப்பட்ட திருப்பனுவல்(பிரபந்தம்) இது. தொண்ணூற்றாறுவகைப் பனுவல் நூல்களுள் தூதும் ஒன்று. காதல் வயப்பட்ட தலைவி ஒருத்தி, தலைவன்பால் தூது அனுப்புவதாக அமைந்தது இச் சிறு நூல்.

சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவர்க்குற்ற கொன்றை மலரை அவர்பால் தூதுப் பொருளாக அனுப்புதல் போன்று இப் பனுவல் எழுதப் பெற்றுள்ளது.

இந் நூலாசிரியர் இறையருளும் தமிழின் மறையருளும் வாய்த்த மணவாளர்: செவ்விய பொருள்செறிந்த தீந்தமிழ்ச் சொற்களால் யாத்தளித்த பாக்களைப் படிக்குங்கால் நெஞ்சக நறவு பிழிகின்றது.

சைவக் கொண்முடிபுக் கலைக்குரிசில், உரைவேந்து செவ்விய புலமை ஒளவை துரைசாமி அவர்கள் ‘இந் நூலுக்கு உவந்தளித்து நல்கிய அணிந்துரையுள், இச் சிறிய நூலின்கண் மடக்கு முதலிய சொல்லணிகளும், பொருளணிகளும் ஆங்காங்கு நின்று அழகு தருகின்றன; திரிசொற்கள் இன்றிச் செஞ்சொற்களே நூல் முழுவதும் நிரம்பிப் படிப்போர்க்கு உவகை தருகின்றன’ — என்று உளமுவந்து பாராட்டியுள்ளார்.

பாடல்களில் பாப்பின்பம் கொழித்துக் குமிழியிடுகின்றது. எடுத்துக்காட்டுக்கு முருக வழுத்துப் பாடல் ஒன்று!

தெள்ளிக் கொழித்தே பருமுத்தைத்
  திரைக்கை யதனால் உவந்துன்னைத்
தெள்ளு தமிழின் தேனிசையால்
  தெளியப் பாடும் அடியவர்க்கே
அள்ளிக்கொடுக்கும் சீரலைவாய்
  அழகா அடியேன் பாடலிதே
உள்ளற் கினிய ஒருசொல்லை
  உவந்தே எனக்கிங் கருள்வாயே!

— என்று வள்ளிக் குறத்திதனை மணந்த, வரையான் தன்னை உளமகிழ்ந்து, துள்ளிக் குதிக்கும் பாவிசையால், இன்பம் துளும்ப வரைந்துள்ளார்!

பாட்டென்னும் பேரிற் பழுதைத் தமிழ்ச் சொற்கள், ஆட்ட மிடுங் காலத்தில் ஆன்ற மணிச்சரம் போல், வந்து கொழிக்கும் வளர்தமிழைப் பார்த்தவுடன், நொந்தழுத உள்ளம் நுரை பொங்கும் வெள்ளம்போல், கார்கண்ட மாமயில்போல் எம்பிக் களிதுள்ளும் சீர்கொண்ட இன்பச் சிலிர்ப்பதனை என்னென்போம் ?

இன்னோர் இயற்கை ஓவியத்தைப் பாருங்கள் :

“தாழை மதுவில் திளைத்த தடஞ்சாலி
வாளை குதிக்க வயல்மறுகும் — மோழையிளங்
கன்றை நினைத்தோடும் காராவின் பால்மணல்
குன்றை யடுத்துக் குளமாகும் — ஒன்றைநல்
அஞ்சம் பெடையுடனே ஆனந்த மாகவே
மஞ்சு நிறமாலாய் அங்குறையும் — விஞ்சுபெரும்
தேரோடும் வெய்யோன் திசையறிய மாட்டாமல்

சவுதி அரேபியாவிலிருந்து ஒரு மடல்!

அன்பினிய இளவல் பொழிலனுக்கு வாழ்த்துகள். நான் விடுப்பில் ஊர் வந்திருந்தபோது காலம் போதாமையால் சென்னை வர இயலவில்லை. திருப்பூருக்கு விடுதலைப்புலி திரு. முகுந்தன் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன்.

அங்கு திரு. க. தமிழப்பன், திரு. முத்துக்குமரண்ணன், திரு. பல்லடம் ஆறுமுகனார் இவர்களைக்கண்டு உசாவினேன். பலசூழல்களால் மடலிடக் காலம் கடந்துவிட்டது.

இங்கு நாங்கள் பதின்மர் உள்ளோம். 30 நுண்ணலை நிலையங்கள் உள்ளன. அவற்றைச் சரிவரப் பேண வேண்டியது எங்கள் பொறுப்பு.

எங்களது தபுக் நுண்ணலை பேணுநர் நடுவத்தின் (Microwave Maintenance Centre) எல்லை 400 அ.மா (கி.மீ) வரை பரந்துள்ளது. மூன்று காட்டுந்துகள் (Toyota land Carrier) தந்துள்ளனர். அவற்றை நாங்களே ஓட்டிச் சென்று, நுண்ணலை நிலையங்களில் பிழை நீக்கி வரல் வேண்டும். ஒரிரு பாகித்தானியரைத் தவிர பிறர் இந்தியர். எங்கள் மேற்பார்வையாளர் சென்னைக்காரர். (கேரளக்காரர்-இனம் அகவையிலிருந்து சென்னையிலிருந்து வருகிறார்—இந்தியத் தொலைபேசியில் உதவிப் பொறியாளராகச் சென்னையில் பணியாற்றியவர். இங்கு வந்தபின் கோட்டப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.) இரண்டு கேரளக்காரர்கள், ஓர் ஆந்திரர், ஓர் இராசகுத்தான், ஓர் இந்துதானி, ஒரு பம்பாய்க்காரர், ஒரு நடுவண் பைதிரர், இரண்டு பாகித்தானியர் என உள்ளனர்.

வேலைப்பளு ஒன்றும் மிகுதி இல்லை. மாதத்தில் 15 முதல் 18 நாள்கள் வெளியே செல்லவேண்டி வரும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

காரோடும் நன்னகரக் கண்ணனையான்—சீரோடும்
வங்கக் கடல்கடந்து வான்பொருளை ஈட்டியே
துங்க அறமேவும் தூநகரோன்—பங்கமில்
சால இருஞ்சங்கம் சாற்றருஞ்சீர் ஓமென்றே
ஓல மிடுந்திரை ஒண்கடலோன்—கூலக்
கரையில் கமடநிறை காதலைத் துய்க்க
வரையில் எழில்சேர் சதுரன்''

— என்று சொல்லொடு பொருளும், பொருளொடு சுவையும், சுவையொடு தமிழும் கலந்தாடும் வண்ணப் பூங்கா போலும் இன்னறும் பாத்தொடை நூல் இது! சமயஞ் சார்ந்து தமிழ் விரும்பும் அன்பார்வ நெஞ்சங்கள் அள்ளிச் சுவை பருகட்டும். ஆசிரியரை வாழ்த்துகிறது நம் தூய தமிழ் நன்னெஞ்சம்.

இங்கு ஈழ நாட்டவர் நிறைய உள்ளனர். அண்மையில் சில குழுமங்கள், புதிய ஒப்பந்தம் கிட்டாமையால், நிறைய யாழ்ப்பாணத்துக்காரர்களைத் திருப்பி அனுப்பிவிட்டன. திரு. நிலவரசன் (இரவி) எனும் யாழ்த்தமிழருடன், பல தங்கல்கட்குச் சென்று, யாழ்த்தமிழர்களைக் கண்டு, ஈழவிடுதலை இயக்கங்கட்குப் பொருள் கேட்டு வருகிறோம். விரைவில் மாதா மாதம் ஒரு தொகை சேர்த்து விடுதலை இயக்கங்கட்கு அனுப்ப இயலும் என நம்புகிறேன். இங்குள்ள ஈழநாட்டு முகமதியர்கள், தம்மைத் தமிழர் என்று சொல்லிக் கொள்வதில்லை. 'முகலீம்' என்றுதான் சொல்கிறார்கள். பேசுவது தமிழ் என்கிறார்கள். 'விலாங்கு மீன்' போன்று இருபக்கமும் நற்பெயர் எடுத்துத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். தற்போது, சிங்களவர்களுக்குத் தமிழர்களைக் காட்டிக் கொடுக்கவும் செய்கின்றனர். அண்மையில் சென்னையினின்று இங்கு (இரியாத் Riyadh- சவுதி தலைநகர்) இரியாத்திற்கு வந்த ஒரு யாழ்த்தமிழரை (அவர் இரியாதில் ஓர் உணவு விடுதியில் பணி செய்கிறார்) அவர் கொணர்ந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளியீடுகள், நாள் காட்டிகள் இவற்றைச், சுங்க அலுவலர் பார்த்த (Checking) போது, அங்கு அருகில் (Cleaning) வேலை செய்த முகமதியர் ஒருவர், இவை இலங்கை அரசுக்கு எதிரானவை எனக் காட்டிக் கொடுக்க, பின் அவரை ஒருமாதம் சிறையில் வைத்திருந்தனர். பின் அங்கிருந்த யாழ்த்தமிழர்களின் முயற்சியால் இலங்கைக்கு அனுப்பபடாமல் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டு விட்டார். இப்படிப் பல. இங்கு யாராவது யாழ்த்தமிழர்கள் விடுதலை இயக்கங்கட்குக் காசு சேர்ப்பது தெரிந்தால், இவர்கள் சிங்கள அரசுக்குத் தெரிவித்து, அவர்கள் கொழும்பு திருப்புங்கால் வானூர்தி நிலையத்தில் வைத்துப்பிடித்து படையினரின் ஆய்வுக்குள்ளாக நேரிடுகிறது. இப்பொழுது இலங்கையின் கிழக்கு வடக்குப்பகுதிகளில் வணிகம், போக்குவரத்து இவை முகமதியர்களால்தாம் செய்யப்படுகிறதாம்.

கடந்த கிழமை இரண்டு மூன்று தமிழர்கள், விடுப்பில் இலங்கை சென்று திரும்பினார்கள். அவர்கள் கூறும் உண்மை நடப்புகளை, கண்ட காட்சிகளைக் கேட்க கேட்க நெஞ்சு வெடித்திடும் போலுள்ளது. சிங்களப்படையினரும், காடையினரும் அத்துணைக்கொடுமைகளை, இழிவுகளைச் செய்துவருகின்றனராம்.

இன்றைய அரபு ஆங்கிலத்தாளில், திருகோணமலையில், 10 அகவைச் சிறுவர்களைப் படையினர், உளவு பார்த்ததாகத், தனிப்படுத்தியுள்ளனராம் என்று செய்தி வந்துள்ளது. பிற பின்னர்.

அன்புள்ள

— நிலாவேங்கடன், தபுக், சவுதி அரேபியா

பெயர்ப் பட்டியல் – 7

தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகள்!

தென்மொழி சுவடி 20, ஓ 5-6 இல் வெளியிடப்பெற்ற அறிக்கையின்படி, தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகளுக்குத் துணையாக நின்றுதவிய அன்பர்களின் பெயர்ப் பட்டியல்கள் கீழே கொடுக்கப் பெறுகின்றன.

1. வாழ்நாள் உறுப்பினர்கள் பட்டியல்கள் :

தென்மொழி :

26.	சிலம்புச் செல்வி வேங்கடவன்,	கோபி	200	00
27.	கு. ச. சண்முகம்	புதுப்பாளையம், கோபி	200	00
28.	கு. ச. உலகமுதல்வன்	கத்தூரிபா சிற்றூர்	200	00

தமிழ்ச்சிட்டு :

18.	சிலம்புச்செல்வி வேங்கடவன்,	கோபி	120	00
19.	கு ச. உலகமுதல்வன்	கத்தூரிபா சிற்றூர்	120	00

2. பத்து உறுப்பினர்கள் சேர்த்த பயனுறு தொண்டுள்ளப் பேராளர்கள் :

தென்மொழி :

9.	கு. தென்னவன்	கறம்புக்குடி (10 உறுப்பினர்கள்)	10×15	150	00
10.	ப. எழில்வாணன்	பள்ளப்பட்டி (10 உறுப்பினர்கள்)	10×15	150	00

தமிழ்ச்சிட்டு :

13.	ப. ஆறுமுகம்	மூலனூர்	22×6	132	00

4. நன்கொடை நல்கிய நல்லருளாளர்கள் :
(16-2-85 முதல் 30-6-85 வரை)

1	சீதாஉதயகுமார், சென்னை-34.	15-00
2	பூம்புகார், கலைக்கல்லூரி மாணவர்கள்.	10 00
3	இளங்கோ, சென்னை 112.	5-00
4	சேகர். சென்னை-112	10-00
5	கணே-மாரிமுத்து மருங்கப்பள்ளம்.	1-11
6	மெ. சிதம்பரனர் சிங்கப்பூர்.	200-00
7	அ.செ. சுப்பு தாடிக்கொம்பு	7-00
8	சி. கணேசன் கீரனூர்.	10-00
9	இளஞ்சேரல் முதுபாண்டியன் மின்பாறை	100-00
10	முத்துக்குமாரசாமி பூவாளிப்பட்டு, திருச்சி,	10-00
11	சவுந்தரபாண்டியன், ஈரோடு.	25-00
12	அ.பு திருமாலன் மலேசியா	41-75
13	சி. சவுந்தரராசன் சீராப்பள்ளி, நாமகிரிப்பேட்டை	29-00
14	கலச. இராமலிங்கம் அண்ணாநகர் சென்னை	25-00
15	நிலா. வேங்கடவன், தபுக் சவுதி அரேபியா	10-00

தமிழ்மொழியைப் பேணுவீரே!

- அருள். செல்லத்துரை.

கோடில்லாக் களிறுண்டா? கோடி டாமல்
குளிரருவி பாய்வதுண்டா? வெள்ளைத் தாளில்
கோடில்லாச் சித்திரமா? கூவி டாத
குயிலுண்டா? நடனமிடா மயில்தா னுண்டா?
வீடில்லாக் குடித்தனமா? வெட்டிப் பேச்சில்
வீணாய் வாணாளைப் போக்கும் நாட்டில்
பீடில்லா வாழ்வுமொரு வாழ்வா? வாழ்வில்
பெரிதரிதாந் தமிழ்மொழியைப் பேணு வீரே!

தென்றலுக்கோ ரினிமையுண்டு; வண்டு தேடும்
தேனுக்கோ ரினிமையுண்டு; கொடியி லாடும்
மென்றளிர்க்கு நுண்மையுண்டு; மாசில் வீணை
விண்ணொன்று தெறிப்பதிலோர் இசையு முண்டு.
கன்றுநினைத் தேசுரந்த ஆவின் பாலில்
கற்கண்டின் இனிப்புண்டு; நமது நாட்டில்
தொன்று தொட்டு வழங்கிவரும் தமிழர் பாட்டில்
தோயுமனத் திற்கென்றே சுவைசொட் டும்மே!

தத்தித்தான் நடைபுரியும் சிறுகு ழந்தை!
தாவித்தான் படர்ந்தேறும் கொடியின் முல்லை!
வித்தித்தான் விளைவறுக்க வேண்டும்; மேலோர்
மெச்சித்தான் மேன்மையுற வேண்டும் முன்னர்
கத்தித்தான் கிளிகூடப் பேச்சைக் கற்கும்
காவிரியின் நீரருவி தாக்கு தல்போல்
மோத்தித்தான் தமிழமறம் மூளு மென்றால்
மும்முரமாய் அதைச்செய்வீர் முன்னே முன்னே!

முல்லைத் தமிழன் வாழ்க!

சென்னை, தண்டையார்ப்பேட்டை, திருவாளர் பு. சிவபெருமான் சிவசெந்தாமரை இணையரின், குழந்தை முல்லைத்தமிழனின் மூன்றும் ஆண்டுப் பிறந்தநாளை யொட்டி உரு. 10/- நன்கொடையாக வரப்பெற்றோம். செல்வன் முல்லைத்தமிழன் எல்லா நலத்தொடும் வளத்தொடும் நீடுவாழ நிறைந்த உள்ளத்துடன் தென்மொழி வாழ்த்துகிறது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

16	இரா. ந. வீரப்பன், மலேசியா	11-80
17	சிவபெருமான் சிவசெந்தாமரை, சென்னை-81	10-00
18	திருவள்ளுவர் பேரவை, காவேரிப்பாக்கம்	10-00
19	கா. நாகராசன், அமரர்பூண்டி.	6-00

மண்ணில் ஓங்குக உரிமை ஈழமே!

— வள்ளிகேள்வன்

ஈழ விடுதலை காண இணைந்தனர்
இன்று விடுதலைப் புலிகளே !
கோழை சிங்களக் காடை யர்க்கினி
குலை நடுங்கிடும் நிலைமையே !
வாழ்வு என்பதிங்(கு) உரிமை மண்ணிலே
மறுப்ப தார்இனி உலகிலே
ஏழு வண்ணமும் சேர்ந்து வானவில்
இணைந்து நிற்குமெந் தோழரே !

அன்று சேரலர் சோழ பாண்டியர்
இமயம் வென்றனர் தோழரே !
இன்று வடவரை உரிமை மீட்கவே
இரந்து நிற்பதோ தோழரே !
என்றும் வடவர்கள் தமிழினத்தவர்
எழுச்சி பெறப்பொறுப் பார்களோ ?
இன்றிணைந்தநீர் என்றும் ஒன்றென
இணைந்து காண்க; தாய் ஈழமே !

ஈழ மண்ணிலே குருதி சிந்திய
இளைஞர் வீரர்கள் எத்தனை ?
ஈழ மண்ணிலே ஒடிந்த வீணையாய்
விழுந்த மங்கையர் எத்தனை ?
தோழமைகொளக் காலம் தாழ்ந்ததால்
நேர்ந்த இழப்புகள் எத்தனை ?
ஈழ விடுதலை வீரப் புலிகளே !
இன்றிணைந்துபின் வலிமையே !

அடிமை யாயினி வாழ்வதிங்கிலை;
ஆறு பத்துநூ றாண்டுகள்
முடிவதாயினும் உரிமை மண்ணிலே
முகிழ்க்க வேண்டும்நல் வாழ்க்கையே !
கெடுவ தோஇனி மானத் தமிழினம்?
கெடுத்த சிங்களக் காடையர்
உடல் பிளந்துசெங் குருதி பூசுக
ஒன்றிணைந்தெழும் புலிகளே !

விண்ணில் ஓங்குக ஈழ விடுதலை
வீரர் விடுதலைக் குரல்களே !
கண்ணில் ஓங்குக கனலும் பார்வையே!
கையில் ஓங்குக கருவியே !
எண்ணில் ஓங்குக கடலின் அலைவென
ஈழ விடுதலைப் படைகளே !
மண்ணில் ஓங்குக உரிமை ஈழமே
மானத் தமிழரின் கொற்றமே !

நாடகம் தொடர்—2

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்.

[பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்]

கிழவர் : யாரது (திரும்பிப் பார்த்து) கண்ணையாவா, வா, வா, (இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டி) உட்காரப்பா.

கண் : தாத்தா மிகுந்த கவலையோடு இருப்பது போலத் தெரிகிறது.

கிழவர் : கவலைதான். என்ன செய்வது? என் பெயர்த்திக்கோ ஒரு பிடி கொம்பு வேண்டும். எனக்கோ அகவை கூடுதலாகிக் கொண்டேபோகிறது. நான் கண்ணை மூடுவதற்குள், ஓர் ஆடவனை வள்ளிக்குச் சேர்த்துவைத்து விட்டால், கவலையெல்லாம் போய்விடும். வேறு கவலை என்ன? எனக்கோ? கடனில்லை, பகையில்லை, காடில்லை பாடுபார்க்க; வாட்டமெல்லாம் வள்ளியைப் பற்றியேதான்.

கண் : தாத்தா! பெண்ணென்று ஒருத்தி பிறந்ததும் அவளுக்கு ஆண் ஒருவன் கட்டாயம் பிறந்திருப்பான். ஒருவேளை அந்த ஆண் நானாகக்கூட இருக்கலாம் அல்லவா?

கிழவர் : ஆமாம்! ஆமாம்! உனக்கு முடித்திடும் எண்ணமும் எனக்குண்டு; ஆனால் முடிவு எப்படியோ?

கண் : தாத்தா! கரும்புச் சாற்றைக் கசக்கும் என்று சொல்லுவது யாரும் இல்லை. திருமணம் கைக்கும் மருந்தில்லையே, தாத்தா! என்னைப் பற்றியும், என் குடும்பத்தைப்பற்றியும், உங்களுக்கு நன்றாகத் தெரியுமே! பணத்தைப் பற்றிய கவலையேவேண்டாம். இந்த ஊரில் பாதி எனக்குச் சொந்தம். சாய்காலோ நாங்கள் நினைப்பதுதான் நடக்கும். மெப்புகழுக்காகச் சொல்லவில்லை. தாத்தா! இந்த ஊரில், நான் எந்தப் பெண்ணையும் சேர்த்துக் கொள்ளலாம். ஏனென்று கேட்க நாக்கற்றவர்கள்தாம் இந்த ஊரில் இருக்கிறார்கள். மேலும் தாத்தா! இக்காலத்தில் மாந்தன் எவன் குணத்தைப் பார்க்கிறான். பணத்தைத்தானே பார்க்கிறான். பணம் இருந்தால், அவன் குருடனாக இருந்தாலும் சரி அல்லது நொண்டி சண்டியாக இருந்தாலும் சரி பெண் கிடைக்கும். என்ன தாத்தா நொண்டியா சண்டியா? வள்ளியை எனக்குத்த வே தாருங்கள் தாத்தா.

கிழவர் : (தலையசைத்து) சரி; சரி நான் அப்படிதான் நினைத்திருக்கிறேன்.

கண் : தாத்தா! என்றைக்குத் திருமணமென்று சொல்லுகிறீர்களோ? அன்றைக்கு (மகிழ்ச்சி முகத்துடன்) திருமணத்திற்கு

வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். விரைவில் முடிவு செய்யுங்கள் வணக்கம் தாத்தா. நான் வருகிறேன்.

காட்சி - உ

உறுப்பினர்கள்: (1) பூ வாங்குவோர்: இளைஞர் சிலர், பெண்கள் சிலர், சிறுவர்கள் சிலர் (2) மற்றும் கருப்பனன் வள்ளி (3) கருப்பனின் நண்பன்

இடம்: 1. தெரு. 2. ஒரு தனி வீடு.

நிலை: மலர் விற்பனையும், வாங்குவோரும், வள்ளியைக் கற்பழிக்க முயலும் நிலை.

பாட்டு

வள்ளி: பூ வாங்குவீரே நல்ல நல்ல
மலர் வாங்கு வீரே.
முல்லை மொக்கோடு செவ்வந்தி மலரும்
எல்லோரும் விரும்பும் தாழம் பூ மல்லிகை—(பூ)

வண்ண வண்ணமலர் கண்கவர் கள்மலர்
பெண்கள் எழிலை பெருக்கிடும் நன்மலர்

என்றும் உண்டிங்கு மாலையோடு கொழுந்தும்
சந்தைச் சரக்கெல்லாம் களைப்பாகும். இவையாவும்
சொந்தமாய்ச் செய்து அணியஞ் செய்தது. (பூவா)

(பாட்டொலி கேட்டுக் கூட்டம் கூடுகிறது.)

பெண்-1: வள்ளி! சரம் கொடு!

வள்ளி: என்ன சரம்?

பெண்-1: முல்லைச்சரம். (காசு கொடுக்கிறாள்)

வள்ளி: பிடியுங்கள். (சரத்தைக் கொடுத்துவிட்டுக் காசை வாங்கிக் கொள்கிறாள்.)

பெண்-2: விடு பூ வைத்திருக்கிறாயா?

வள்ளி: ம்...உண்டு முல்லை மொக்குதானே?

பெண்-2: ஆமாம் கொடு. (காசு கொடுக்கிறாள்)

வள்ளி: (ஒரு கொட்டானில் அளந்து போடுகிறாள்)

பெண்-2: (வாங்கிக்கொண்டு போகிறாள்.)

சிறுமி: வள்ளி அக்கா, சிவந்திப் பூ வேண்டும்.

வள்ளி: செவ்வந்தி என்று கேள். தமிழை நன்றாகப் பேசு.

சிறுமி: சரி. செவ்வந்தி கொடு; அக்கா, இந்தா காசு.

வள்ளி: (பூவைக் கொடுத்துக் காசை வாங்கிக் கொள்கிறாள்.)

சிறுமி : ரோசாப் பூ வைத்திருக்கிறாயா ?

வள்ளி : ரோசா இல்லம்மா. இந்தப் பூவிற்கு (பூவைக் காட்டி) தமிழ்ப்பெயர் முளரி. (சிறுமியை பார்த்து நாடியைத் தாங்கி) நல்ல தமிழ் பேசப்பழகு என்ன? நீ என்ன செய்வாய் நாற்றுங்கால் பள்ளியில் (எல்.கே.சி., யூ.கே.சி. பள்ளியில்) ஆங்கிலம் படித்துக் கொண்டிருப்பாய் அப்படித்தானே.

சிறுமி-2 : ஆம் அக்கா. தமிழ் படித்துக் கொடுக்க நான் படிக்கும் பள்ளியில் ஆள் இல்லை ;

வள்ளி : தமிழ் பேசவே ஆள் இல்லை; பின் படித்துக் கொடுக்க எங்கே, தமிழ் நாட்டில் தமிழ் ஆசிரியர் அகப்படுவார்? அவர்களும் வடமொழியையும், ஆங்கிலத்தையும் தமிழோடு கலந்து தானே பேசுகிறார்கள், இந்தியையும் சேர்த்துப் பேசுவார்கள் அப்படித்தானே.

சிறுமி 2 : ஆமாம்... அக்கா தமிழாசிரியர்களின் பிள்ளைகளும் எங்கள் ஆங்கிலப் பள்ளியிலேதான் ஆங்கிலம் படிக்கிறார்கள்.

வள்ளி : அப்படியா! வயிற்றை நிரப்பத் தமிழ் படித்திருப்பார்கள் போலும். (குழந்தையின் நாடியைத் தாங்கி) எங்கே சொல்லு முளரி.

சிறுமி-2 : சரி அக்கா. முளரிப் பூ கொடு (காசு கொடுக்கிறாள்)

வள்ளி : (புன்முறுவல் காட்டி) இன்னொரு தடவை சொல். முளரிப்பூ என்று

சிறுமி-2 : மூளரிப்பூ (சொல்லுகிறாள்)

வள்ளி : நல்லபிள்ளை. இனி ரோசாப்பூவை முளரிப்பூ என்றே சொல். என்ன? (பூவைக் கொடுத்துக் காசை வாங்கிக் கொள்கிறாள்.)

சிறுமி-2 : முளரிப்பூ, முளரிப்பூ (என்று சொல்லிக் கொண்டே ஓடுகிறது.)

இளைஞர்-1 : பூ வணிகமா? அல்லை ஆசிரியர் வேலையா? என்ன வள்ளி மாலை கட்டுவாயா?

வள்ளி : நீ சிலை கட்டினால் நான் மாலை கட்டுகிறேன். தாலியும் கட்டுவேன்.

கூட்டம் : (கொல்லென்று சிரிக்கிறது)

இளைஞர்-2 : என்ன குறும்பு (இளைஞர் 1-ஐப் பார்த்து) டோய்! உன்னை மடக்கி விட்டாள். பார்த்தாயா? இனி இங்கு நிற்கக்கூடாது. நின்றால் அவள் வேட்டிகட்டிக் கொண்டு நமக்குத் தாலிகட்டி விடுவாள் வா (போய் விடுகிறார்கள்).

(வானில் மழை மேகம் கூடுகிறது. மின்னல், இடி இடிக்கிறது)

வள்ளி : (மழை மேகம் கண்டு அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு

விட்டு அச்சப்படுகிறாள்) மழை வரும் போலத் தெரிகிறது. மலர் வேண்டுவோர், ஓடிவருக.

கூட்டம் : (விரைவாக மலர்களை வாங்குகிறார்கள்.)

வள்ளி : விரைந்து வீடு திரும்புகிறாள் மழை வந்து விடுகிறது. விரைவாக நடந்துவந்து தனியாக இருந்த ஒரு வீட்டின் திண்ணையில் நின்று பலகணி வழியாக உள்ளே பார்க்கிறாள்.

கருப்பணன் : யாரது (வெளியில் வந்து பார்க்கிறான்) (அவன் தோற்றம் அச்சம் தருவதாய்த் தெரிகிறது. கடாமீசை, துந்தி வயிறு; கட்டம் போட்ட முட்டி (லுங்கி அல்லது சாரம், அணிந்திருக்கிறான்)

வள்ளி : (அஞ்சி ஓடுகிறாள்.)

கருப் : (அவளைப் பின் தொடர்ந்து) நில். எத்தனை நாள் உன்னை அடைய கனவு கண்டேன். நீயாக வந்து சேர்ந்தாய். நில் ஓடாதே.

வள்ளி : (ஓடுகிறாள். திரும்பிப்பார்க்கிறாள், ஓடுகிறாள்)

கருப் : (கல்லைக் கையில் எடுத்து) ஓடி க்க முடியாவிட்டால் கொட்டி கவிழ்ப்பேன். [கல்லுள்ள கையை ஓங்கி] எறிந்து விடுவேன் நின்றுவிடு.

வள்ளி : (ஓடுகிறாள்.)

கருப் : (பின் தொடர்ந்து ஓடி, வள்ளியைப் பிடித்துக்கொண்டு வருகிறான்.) ஏன் ஓடுகிறாய்? உனக்கு நல்ல காலம். உனக்கு என்ன வேண்டும் கேள்! தருகிறேன்.

வள்ளி : என்னை விட்டுவிடு. தனியாகத் தவறி வந்த பெண்ணிடம் வம்பு எதுவும் செய்யாதே.

கருப் : இது வம்பு இல்லையடியம்மா; அன்பு, உன்மீது படர்ந்த அன்பு. அந்த அன்பின் பரிசை வீட்டிற்குள் வந்ததும் தருவேன். (இழுத்துக்கொண்டு போய், வீட்டிற்குள் போட்டு உள்ளிருந்து கதவைப் பூட்டுகிறான்.)

வள்ளி : அண்ணா! என்னை ஒன்னுஞ் செய்யாதீர்கள். (கை கூப்பிக் கும்பிடுகிறாள்)

கருப் : வள்ளி, பழம் இருக்க, காயைக் கடிக்காதே அத்தான் என்று அன்பாய் கூப்பிடு. அச் சொல்லில் எத்துணை இனிமை இருக்கிறது.

வள்ளி : அயல் பெண்ணை உடன்பிறப்பாகக் கருதும், தமிழ்ப் பண்பை மறக்கவேண்டாம்.

கருப் : தமிழாவது, மலையாளமாவது. எத்தனை நாளாய் உன் உடலின் கூட்டில் வாய எண்ணியிருந்தேன். நீ என்ன பேசி என்ன செய்ய? ஒன்றும் பேசாதே. என்ன சொல்லுகிறாய்?

வள்ளி : வேண்டுமானால் என் உயிரைப்போக்கி விடு. கற்பிற்கு மட்டும், களங்கஞ் செய்து விடாதே.

கருப் : உலகத்தில் என்னவெல்லமோ போகிறது. பெருந்து வண்டி போகிறது. புகை வண்டி போகிறது. மிதி வண்டி போகிறது. அஃதோடு சேர்ந்து கற்பும் போனால் என்ன? காற்றுப் போவதைப்போல போகட்டுமே! கண்ணிற்குக் காற்றுப்போவது தெரியவா செய்யும், அதைப்போல கற்புப் போனதா இல்லையா என்று எவனுக்குத் தெரியும்?

வள்ளி : [பக்கத்திலிருந்த அரிவாளை எடுத்து] சீ! அறிவு கெட்டவனே! உன் உயிரைப் போக்குவேன். நானும் செத்து மடிவேன். என் உடலை நீ, ஒன்றுஞ் செய்ய இயலாது. கத்தியால் அவனைக் குத்தப் பாய்கிறாள்.]

கருப் : வா. வா. [பிடித்து அணைக்கிறான்.]

வள்ளி : [மல்லாடுகிறாள்] என்னை விட்டுவிடு இன்னொரு நாளைக்கு வருகிறேன். [கெஞ்சி] அண்ணே கட்டாயம் வருகிறேன். [காதல் கொண்டவள் போல நடிக்கிறாள்.]

கருப்-நண்பன் : [கதவைத் தட்டுகிறான்] ஏய்! என்னடா! செய்கிறாய் ?

கருப் : யாரடா நீ [கதவைத் திறக்கிறான்] ஓ நீயா என்னடா இப்போது வந்தாய். மழை பெய்வதற்குமுன் இடி இடித்து மேகத்தைக் கலைத்ததைப்போல வந்து விட்டாயே!

வள்ளி : [வெளியில் ஓடிவிடுகிறாள்.]

கருப்-நண் : டேய்! பூக்காரியை எப்படியடா இங்கே கொண்டு வந்தாய் ?

கருப் : போடா! மடையா! மடைவாயிலில் காத்திருந்த கொக்கு போல இருந்து பிடித்த கெண்டை தப்பித்து விட்டதடா. எல்லாம் உன்னால்தான்.

கருப்-நண் : அடேய்! நீ இப்படி இங்கு இருப்பாய் என்று எண்ணவில்லை சரி...சரி... இனிதான் என்ன! மேலும் முயலலாம்.

கருப் : டேய்! வந்தவேலை என்னடா!

கருப்-நண் : அ'தாவது சொள்டா. டேய் நாளை அமைச்சர் வருகிறார். கருப்புக்கொடிக் காட்டவேண்டுமாம். நான்கு கட்சிக்காரர் கூடி என்னிடம் பத்தாயிரம் உருபாய் தந்திருக்கிறார்கள், நாம் இருவரும் சேர்ந்து ஓர் ஆயிரம் பேரைத் திரட்டிக் கருப்புக் கொடியை அவர்கள் கையில் கொடுத்துக் காட்டச் சொல்லவேண்டும்.

கருப் : அ'தெப்படியடா, பத்தாயிரம் உருபாய் காணும்? ஒராளுக்குப் பத்து உருபாய் ஊதியமாகக் கொடுத்தால்தான் வருவார்கள். அதுகூட நமக்காக, ஆயிரம் பேர் வருவார்கள் பின்

நமக்கு என்னடா கிடைக்கும்? நாமென்ன வேலையா பார்க்கிறோம். இப்படிப்பட்ட வேளையிலே தான்டா தட்ட வேண்டும்.

கருப்-நண் : நீ சொல்லுவதும் சரிதான். அப்படியானால் ஒன்று செய்வோமா? இரவலர் (பிச்சை) கூட்டத்தைத் திரட்டினால் ஆளுக்கு இரண்டு உருபாய் கொடுத்தால் போதும். ஆயிரம் பேருக்கு இரண்டாயிரம் போக மீதியிருக்கும் எண்ணாயிரத்தையும் நாம் பங்கு போட்டால் ஆளுக்கு நாலாயிரம் தேறும்.

கருப் : செலவிற்கு என்ன செய்வது ?

கருப்-நண் : என்ன செலவுடா ?

கருப் : கருப்புக்கொடி வாங்கவேண்டாவா ?

கருப்-நண் : அவையாவும் கட்சிச் செலவு.

கருப் : அப்படியென்றால் சரி. இன்றிரவு அந்தக் கூட்டத்தைப் பார்த்து, ஆளைத் திரட்டுவோம். நீ புகை வண்டி நிலையத் தப் பக்கம் வந்து சேர். அங்குதான் இரவலர் கூட்டம் கூடிக் கிடக்கும். அடேய் இன்னொன்று.

கருப்-நண் : என்ன ஒன்று ?

கருப் : இரவலரைக் கொண்டு (பிச்சைக்காரர்களைக் கொண்டு) கருப்புக்கொடி காட்டினார்கள் என்று செய்தித்தாளில் எழுதித் தொலைப்பான்களே!

கருப்-நண் : நமக்கென்னடா! அதைப்பற்றிக் கவலை? நாட்டில் கிளர்ச்சி செய்கிறவன் என்ன? அரசியல் வழக்கரா?

கருப் : ஆமாம், ஆமாம் சரி போ. நான் புகை வண்டி நிலையத்துப் பக்கம் வந்து விடுகிறேன்.

கருப்-நண் : மறவாமல் வந்துவிடு, டேய் உருபாய் 4000/-உடலை ஆட்டாமல் கிடைக்கிறது.

கருப் : கையூட்டு (இலஞ்சம்) வாங்குகிறவனுடைய உடல் எவனுக்கு ஆடுகிறது? ஆடாமல் அசையாமல் நிமிர்ந்து நின்று துணிந்து வாங்குகிறான்.

கருப்-நண் : அந்தப் பேச்சு நமக்கெதற்கு ஒவ்வொருவனும் தேர்தலில் பணத்தை அளக்காமல் கொட்டுகிறான். அதற்குப் பின் அளந்து கேட்டு வாங்குகிறான். நீ மறக்காதே வந்துவிடு.

கருப் : அதெப்படிடா வராமல் இருப்பேன் நீ போ நான் ஒரு ஐந்நூறு போட்டுக்கொண்டு வந்து விடுவேன்.

கருப்-நண் : இதற்குத்தாண்டா மதுக் கடைகளைத் திறந்தார்கள் நன்றாகப் போட்டுக்கொண்டு வந்துசேர். (போய்விடுகிறான்.)

(தொடரும்)

எண் திசையும் ஒலித்திடுவாய்!
இணையில்லாப் பெருந்தமிழே!

— புலவர். ப. எழில்வாணன், க.மு. கல்.இ

1. கல்லோடு மண்தோன்றிக்
காட்பொழிந்து புல்தோன்றிக்
கண்மாந்த உயிர்தோன்றிக்
கதைத்தொலித்த காலத்தில்
சொல்லோடு பொருள்தோன்றிச்
சுழியோடு வளர்ந்தோங்கித்
சீருற்ற தமிழ்மொழியே!
துரும்புன்னை அழித்திடுமோ?

2. விரிவானும் பெருமண்ணும்
விடிகதிரும் கருங்கடலும்
வெண்மதியும் உள்ளளவு
விளையாடும் வண்டமிழே!
நரியோடு சிற்றூடும்
நாயோடு பேரெலியும்
நக்கலித்துப் படைகொண்டு
நனிகடலை வென்றிடுமோ?

3. செந்தமிழர் உடலெல்லாம்
செங்குருதி அணுவெல்லாம்
சிந்தனையின் துளியெல்லாம்
செழித்திருக்கும் செந்தமிழே!
வெந்தவுடல் உறுப்பெடுத்து
வேறுவுடல் கண்டார்கள்!
விரிந்தமொழி என்றார்கள்!
வென்றிடுமோ உன்றனையே!

4. ஆழ்கடலின் அருமுத்தே!
அறம்பொருளின் இன்முகடே!
ஆன்றோரின் சிந்தனைகள்
அடங்கியுள்ள பெட்டகமே!
வாழ்மொழிகள் தலைகுனிந்து
வளர்வதற்குத் துணைதேடி
வலுவிழக்கும் இந்நாளில்
வலிபெற்றாய்! தனிமலையே!

5. எத்துறைக்கும் ஏற்புடைய
எழில்மிகுந்த சொற்பெருக்கே!
எண்ணற்ற நூல்வளத்தால்
என்றுமுள தென்றமிழே!
இத்தரையை ஆட்சிசெய்தே
இயக்குகின்ற பேராற்றல்
இனிதுடைய தனித்தமிழே!
இனிமுட்டம் விலகிடுமே!

6\. எண்டிசையும் ஒலித்திடுவாய்!
இகல்முறித்த இன்றமிழே!
முன்னையிலே வளர்ந்துயர்ந்த
இணையில்லாப் பெருந்தமிழே!
மண்மீதில் உனைவீழ்த்தி
மகிழ்ந்தாடல் நிகழ்ந்திடுமோ?
மண்குதிரை கடல்நீந்தி
மறுகரையில் ஏறிடுமோ?

7\. நெடுவாழ்வு பெறுதமிழே!
நின்பெருமை பலரறியார்!
நிலத்தாயின் முதன்மகவே!
நீருலகை அரசாள்வாய்!
சிறுதாழ்வு நினக்கெனினும்
சீர்கேடே உலகுக்கு!
சிற்றெறும்பால் நெருப்பினுக்குச்
சிறுதீங்கும் உண்டாமோ?

8\. ஒண்டமிழே! உன்னருளால்
ஒளிபெற்றோம்; உயிர்பெற்றோம்!
ஒல்லாமை என்பதில்லா
உயர்தமிழே பேறுபெற்றோம்!
கண்டவரும் வியக்கின்றார்!
கனிச்சாறே! தேம்பாகே!
கரையில்லாப் பெருங்கடலும்
கறையானுக் கிரையாமோ ?

9\. பாவலரின் உள்ளிருப்பே !
பைந்தமிழே ! பால்நிலவே !
பார்புகழும் தேனூற்றே !
பருகியவர் உனைமறவார் !
நாவலரின் உள்ளொலியே ;
நற்றமிழே ! நல்லணியே !
நானிலத்தில் முழுமதியை
நாய்கவ்விக் கடிப்பதுண்டோ !

10\. என்றென்றும் வாழ்ந்திடுவாய் !
எங்கெங்கும் வளர்ந்திடுவாய் !
எவ்வெதிர்ப்பும் தூளாகும் !
இவ்வுலகும் தொழுதேத்தும் !
நன்றென்றே முகமலர்வாய் !
நல்லோரைக் காத்திடுவாய் !
நாள்தோறும் உன்புகழை
நாவாலே பாடிடுவோம் !

தில்லியில் நடந்த கூட்டுச்சேரா நாடுகளின் அவல நாடகம்!

— மனோரிசி —

உலகமே மலைக்கக்கூடிய அளவுக்கு நூற்றியொரு நாடுகளின் தலைவர்கள் டெல்லியில் குழுமினார்கள் என்றும், யாருமே செய்ய முடியாத செயலைச் செயற்படுத்தி விட்டார்களென்றும் இந்தியாவே பெருமைபட்டுக் கொண்டிருக்கிறது. ஏழாவது கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டிற்கு வருகைதந்த தலைவர்களை வரவேற்கவும், உயிருக்குப் பாதுகாப்புத்தரவும் டெல்லியே வேறுபடுத்தப் பட்டது. இந்தியாவில் இயல்பாக நடந்துவரும் மக்கள் படு கொலைகளை வெளியிடும் இதழ்கள் மற்றவர்கள் கண்ணில் படாமலிருக்க விரைவான முயற்சிகள் நடந்தன. இதுவரை ஆறு மாநாடுகள் நடந்து முடிந்துவிட்டன.

கூட்டுச்சேரா மாநாட்டின் வரலாற்றுப் பின்னணி :

பிரிட்டானியக் குடியேற்ற மேலாண்மையிலிருந்து விடுபட்ட நாடுகள் காமன் வெல்த் மாநாடு என்ற ஓர் அமைப்பைக் கொண்டுள்ளன. அதைப்போலவே, மூன்றாம் உலக நாடுகளின் கூட்டு அமைப்பான இந்த மாநாடு 1961-இல், யூகோசுலேவியாவின் பெல்கிரேடில் முதல் முறையாகக் கூடியது. அப்போது 25 நாடுகள் பங்கேற்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் சீன, உருசியா, அமெரிக்கா ஆகிய வல்லரசுகளின் போக்கினால் அச்சமடைந்த இந்தியா, யூகோசுலேவியா, எகிப்து ஆகிய மூன்று நாடுகளின் தலைவர்கள் கூட்டிய மாநாடு அது. மூன்றாம் உலக நாடுகளின் பின்தங்கிய நிலையினை வல்லரசுகள் வலுவாக்கிக் கொள்ளாமலிருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தார்களாம். சுருக்கமாக, வல்லரசுகளின் படைக்கல வலிமைக்கும், பண உதவிக்கும் அடிமைப்பட்டுப் பின்தங்கிய நாடுகள் நசுக்கப்பட்டு விடக்கூடாது என்பது சரியான காரணம் தான். ஆனால் டெல்லியில் நடந்த 7 ஆவது மாநாடுவரை இந்த இயக்கத்தின் கதை என்ன? குறிப்பாகப் புதுமுறைப் படைக்கலங்களுடனும் உலக வைப்பகம் மூலம் கடனை கொடுத்த பணத்திற்குக் கோடிக்கணக்கில் வட்டியைத் திருப்பிக்கொடு என்ற மிரட்டலுடனும் பொருளியல் சுரண்டல்கள் ஏற்படுத்தும் அமெரிக்காவிற்கும் அயல், அண்டை நாடுகளில் திறமையாக ஊடுருவித் தன் நாட்டின் பரப்பளவைப் பெருக்கிக் கொள்ளும் உருசியாவிற்கும் பரிவு காட்டி அவற்றின் எண்ணங்களை வெளிப் படுத்தவும் கூட்டுச் சேரா நாடுகளின் மாநாடு பயன்பட்டு வருகிறது.

உருசியா — எதிர் — அமெரிக்கா

ஆறாவது கூட்டுச் சேரா நாடுகளின் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய கியூபாவின் குடியரசுத் தலைவர் பிடல் காசுற்றோ வெளிப் படையான உருசிய ஆதரவாளர். உருசியாவின் வன்பிறப்புக்கு உள்ளிருக்கும் ஆப்கானிசுதானில் உருசியப் படைகளுக்கு உதவி

யாக கியூபாவின் படைகள் விடுதலை இயக்கத்தை நசுக்கவும் வியட்நாம் படையின் ஒரு பிரிவு, காபூல் வானூர்தி நிலையத்தைக் காக்கவும் எண்ணெய் வயல்களை ஆட்சிசெய்வதில் பல்கேரியப் படைகளும் ஈடுபட்டுவருகின்றன. கியூபா தனது அண்டை நாடான அங்கோலாவில் இன்றும் ஊடுருவிக் கொண்டிருப்பது அமெரிக்க முற்றாண்மைக்குப் பெரும் எரிச்சல். அமெரிக்கா தனக்கு ஆகாத நாடுகள் மேல் வலியுறுத்தும் பொருளியல் தடை கியூபாவின் மீதும் 22 ஆண்டுகளாக இருக்கிறது. எனவே, கியூபா தனது நாட்டின் அரசியல் சார்புத் தன்மையை வைத்து மாநாட்டின் முதல் கூட்டத்திலேயே அமெரிக்காவின் போக்கினை வன்மையாகக் கண்டித்தது. கூட்டுச்சேரா நாடுகள், உருசிய ஆதரவுடையதாயிருக்கவேண்டும் என விரும்பும் நாடுகளில் கியூபாவும் ஒன்று.

இதனால் அமெரிக்கா கூட்டுச்சேரா மாநாட்டைச் சமனில்லாமல் செய்யவேண்டும் என்று பல வகையில் முயல்கிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகள் அமெரிக்காவின் படைக்கலக் குவிப்பையும், டீகோகார்சியா தீவில் படைத்தளங்கள் அமைத்துள்ளதையும் மறைக்கப் பார்த்தன. இந்த அமெரிக்க ஆதரவு நாடுகள், ஐ. எம். எப். என்னும் பன்னாட்டுப் பணக்குவையக் கடன், உலக வைப்பகக் கடன் போன்றவற்றால் அரசியல் நோக்குடன் தலையிட்டுப் பின்தங்கிய நாடுகளை அடிமைப்படுத்தும் அமெரிக்காவின் மேலீட்டைக் கண்டு கொள்ளாமல் சப்பைக் கட்டின, இசுரேலுக்குக் கருவிகள் தாராளமாகக் கொடுத்துப் பாலத்தீன் விடுதலைப் படையினரை நாடில்லாதவர்களாக்கி, அரபு நாடுகளின் நிலையான எதிரியை வலுப்படுத்தும் அமெரிக்க முற்றாண்மையின் போராளராகவே அவை செயல்பட்டன.

யாருடன் யார் கூட்டு என்ற போட்டியில் கூட்டுச் சேரா மாநாடு மாபெரும் வெற்றி என்று இந்திராவும், மாநாட்டின் மூலம் அதிகச் சலுகைகள் பெற்ற இதழ்களும் வலுவாக விளம்பரம் செய்தன. உண்மை நிலையில் கூட்டுச்சேரா மாநாடு நடக்கவில்லை. உருசியாவிற்கும், அமெரிக்காவிற்கும் வால் பிடித்து நல்ல பெயர் வாங்கிக்கொள்ளும் முயற்சியில், இந்த நாடுகள் போட்டியிட்டன. இந்த மாநாட்டின் தலைவராக்கப்பட்ட இந்திராவின் முதல் நாள் உரை ஆவணமாக்கப்பட்டது.

முதல் நாள் உரையின் சாரம்:

1. நியூட்ரான் அணுக் கருவிப்பரவலை வல்லரசுகள் தடை செய்ய வேண்டும்.

2 புதிய உலகப் பொருளியல் அமைப்பினை (**New International Economic Order**) ஏற்படுத்த வேண்டும். அதற்கான கடன் பெறப் பணக்கார நாடுகளின் அருள் என்றும் வேண்டும்!

3. பொருளியலிலும், தொழில் நுட்பத்திலும் மூன்றாம் உலக நாடுகள் முன்னேற்றமடையப் பணக்கார நாடுகளையே நம்பி நிற்கிறோம்.

இந்த மூன்று முகாமையான கோரிக்கைகளும், அமெரிக்க, உருசிய நாடுகளின் அச்சுறுத்தலுக்கும், அவற்றின் தந்நலமான ஆதாயத் திட்டங்களுக்கும் பணிந்து போட்ட பரிவு வேட்புகளே. இதன் மூலம் மூன்றும் உலக நாடுகள் தங்களுடைய தனித் தன்மையை இழந்துவிட்டன, இதன்மூலம், இந்த மாநாடு வல்லரசுகளின் அருள் இல்லாமல் எங்களால் எதையும் செய்யமுடியாது எனத் தீர்மானம் இயற்றிவிட்டன.

சொல்லப்பட்டது உலக அமைதி :

1. உலக அமைதிக்கு நாடுகளிடையே போர் ஏதும் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும்.

2. எந்த வல்லரசும் இன்னொரு நாட்டின் ஆட்சியில் தலையிட, அல்லது படை வலிமையில் கையகப் படுத்தக்கூடாது.

இவ்வாறு கூட்டுச்சேரா மாநாட்டுத் தீர்மானத்தின் மூலம் அமைதிக்கான குரலாகக் கொடுத்தது. ஆனால், இது மிகவும் வலு மெலிந்த குரல்தான்.

நடந்து கொண்டிருப்பது

வல்லரசுகளிடையே படைக்கலப் போட்டியும், மேலீட்டு வெறியும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. அமெரிக்கத் தலைவர் ரீகனின் அரசு, நியூட்ரான் குண்டுகளுக்காகச் செலவளிப்பதில் ஒரு டாலர் கூடக் குறைத்துக்கொள்ள அணியமாக இல்லை. பாலத்தீனம், நிக்காரகுவா, எல்சால்வடார், நமீபியா ஆகிய நாட்டு மக்களின் விடுதலை உணர்வினை நசுக்க அமெரிக்கா தொடர்ந்து படைக்கல உதவியினை அளிக்கிறது.

பாலத்தீனியரின் விடுதலைப்போர் :

தங்களுக்கென நாடு ஒன்று இல்லாமல், அதன் மக்கள் பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். இந்தக் கூட்டுச்சேரா மாநாட்டில் பாலத்தீனியரின் சிக்கலும் எழுப்பப்பட்டது. ஆனால், அமெரிக்காவோ அதன் எதிரியான இசுரேலுக்குக் கருவிகளை அதிக அளவில் வழங்கி எண்ணெய் வள நாடுகளை மறைமுகமாக அச்சுறுத்தி வருகிறது, இசுரேல் அடிக்கடி தன் படையின் வலிமையை ஆய்ந்து கொள்ளவும், பாலத்தீனியருக்கு ஆதரவு தரும் அரபு நாடுகளை அச்சுறுத்தவும் ஏதாவது செய்வது என்பது வழக்கமாகி விட்டது. இராக்கி எல்லைக்குள் நுழைந்து அது கட்டிவந்த 'அணு உலைக் கதிர்களைச் சில மணி நேரத்தில் தாக்கி அழித்துவிட்ட இசுரேலை ஐ. நா. அவையிலிருந்து வெளியேற்ற முடியவில்லை. அமெரிக்கா மறுப்பு' அதிகாரத்தைப் பயன்படுத்திவிட்டது.

இரான் - இராக் போர் !

வெகு நாள்களாக நடைபெற்று வரும் இந்தப் போர், உடனடியாக நிறுத்தப்பட கூட்டுச்சேரா மாநாடு எழுப்பிய கோரிக்கை ஒன்றுக்கும் பயனில்லை. மேலும், இந்த இரு நாடுகளுமே கூட்டுச் சேரா மாநாட்டில் கலந்துக் கொள்வதை, அந்த நாடுகளே ஒரு பொருட்டாகக் கருதவில்லை. இராக்கின் குடியரசுத் தலைவர் இந்தியாவில் இரான் மாணவர்கள் அதிகம் இருப்பதால், உயிருக்கு ஊறு ஏற்பட்டுவிடும் என்று கலந்துக் கொள்ளவில்லை,

போலந்தில் தொழிற் கழக அடக்குமுறை :

உருசியா, ஆப்கானிசுதானில் மேலீடு செலுத்துவது மட்டுமல்லாமல், போலந்திலும் அதிகாரத்தில் இருக்கிறது. தொழிலாளர்களின் உரிமைகளைப் பரப்பிவரும் உருசியா, போலந்தின் பெரிய தொழிலாளர் இயக்கத்தை (Solidarity Movemont) அடியோடு ஒழிக்க தடைச்சட்டம் போடச் செய்துள்ளது. உலக அரங்கிலுள்ள பல்வேறு அரசியல் அவலங்களைக் கண்டிப்பதில் இந்தக் கூட்டுச் சேரா நாடுகள் துணிவு காட்டவில்லை.

அணுக் கருவிப்போட்டி :

மேற்குச் செர்மனியில் நியூட்ரான் கருவிகளை ஆதரிக்கும் ரீகனுக்கு ஆதரவான ஆளும் கட்சி வெற்றி பெற்றுள்ள சமயத்தில் கூட்டுச்சேரா மாநாட்டில் அதிக இடங்களில் குறை கூறப் பட்டுள்ளதால், ரீகன் அரசு கொஞ்சம் எரிச்சல் அடைந்துள்ளது. ஆறாவது மாநாட்டிலிருந்தது போலத் தங்களுக்கு வாய்ப்பான வாசகங்கள் இல்லை என உருசியா சிறிது ஏமாற்றம் அடைந்தாலும், இந்தக் கூட்டுச் சேரா மாநாட்டின் முடிவுகள் தீர்மானங்கள் இந்த வல்லரசுகளின் மேலீட்டுப் போக்கினை மாற்றப் போவதில்லை .காரணம் இந்தத் தீர்மானங்கள் எல்லாம சட்ட அளவோடு தான். இவற்றைச் செயல்படுத்துவதற்கான உண்மையான ஆக்க வழியான ஒற்றுமை அல்லது புரிந்து கொள்ளுதல் இந்த நாடுகளுக்கிடையே கொஞ்சம்கூட இல்லை.

மூன்றும் உலக நாடுகள் சார்பாக இந்தியா இந்த மாநாட்டில் என்ன செயலாக்கியது :

தனித் தன்மையுடைய முடிவுகளோ, வரிச் சுமையால் அடிமைப்பட்டிருக்கும் ஏழை நாடுகளின் எதிர்ப்புக் குரலோ அங்கு எதிரொலிக்கவில்லை. மாறாக, கூடலிக்கவால் பிடிக்கும் முதுகெலும் பற்ற நாடுகளின் முணு முணுப்புக்கள் தாம் இதழ்களாலும், விளம்பரக் கருவிகளாலும் பெரிதாக்கப்பட்டு விட்டன. உருப்படியாக இந்த மாநாடு எதையும் செய்து விடவில்லை.

இந்தியாவுக்கு இந்த மாநாட்டின் மூலம் மிகவும் பெருமை கிடைத்து விட்டதாகவும், இந்திராவை விட்டால் வேறு யாரும்

சிறப்பாக செய்திருக்க முடியாது என்றும், 'தம்பட்டம்' அடித்துக் கொள்கின்றன. உண்மையில், இதற்கு முன் நடந்த 6 மாநாடுகளையும் இந்தியாவைவிடப் பின்தங்கிய நாடுகள் நடத்திக்காட்டின. எனவே, இதனை யாரும் மிகப் பெரிய செயல் என்று எண்ணிவிட வேண்டாம். 101 நாட்டு அரசியல் தலைவர்களின் உயிரைப் பாதுகாத்து, ஊறுபாடில்லாமல் முடித்து விட்டார்களாம். இவை காக்கத் தெரிந்த இந்திய அரசியலாருக்கு அந்தச் சொல்ல, துளியும் தகுதி கிடையாது. அசாமில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மாந்த உயிர்களுக்குப் பாதுகாப்பளிக்க வக்கில்லாத அரசுக்கு மற்ற செயல்களைப் பற்றிப் பேச என்ன முறை இருக்கிறது? மாநாடு நடக்கும் சமயத்தில் 'இந்தியா டுடே', 'சண்டே' ஆகிய இதழ்களை வெளியிட்ட அசாம் படுகொலைகள் பற்றிய இதழ்கள் வெளிவராமல் இருக்க இந்திராவின் அதிகார வலிமை எத்தனைத் தில்லுமுல்லுகளைச் செய்தது! இந்திராவின் ஆட்சித் திறமைக்கு அசாமும், அநீதிகளும் போதும்.

மாந்த உரிமைகள்: (Human Rights)

போரினால் அழியக்கூடிய மாந்தர் உயிர்களைப் பற்றிப் பேசிய நாடுகள், தங்கள் நாட்டினில் மறுக்கப்பட்டு வரும் மாந்தர் உரிமைகளைப் பற்றிப்பேச அணியமாகவில்லை. மாந்தனின் அடிப்படை உரிமைகளையும், அதற்கான போராட்டங்களையும் இதில் கலந்து கொண்ட எந்த நாடுமே பெரிதாக நினைக்கவில்லை. ஏனென்றால், தலைவர்களின் உயிருக்குத்தான் 'குளிர்சாதன ஏந்து'கள், ஏராளமான பாதுகாப்பு இருக்கின்றனவே. உலக வாணிகத்தைப்பற்றியும், பொருளியல் நல்லுறவுகளைக் குறித்தும் உரையாடினார்கள். இவை எல்லாம், வறுமைக் கோட்டின் கீழ் வாடிச் செத்துக் கொண்டிருக்கும் மக்களுக்குச், சல்லிக்காசுக்கும் பயனற்றவை. மற்ற உலக வைப்பகங்களுடனும், பன்னாட்டுப் பணக் குவையங்களுடனும் பல நாடுகளை முன்பே அடிமையாக்கி, ஏழைகளை மேலும் ஏழைகளாக்கி விட்டன. நாட்டின் பெரிய பண முதலைகளுக்காகவே, நடந்துவரும் அரசுகள் வாழ வழிகளற்றுக் குற்றுயிராய்க் கிடக்கும் மக்கள் உயிர்களைப் பற்றியோ, அவர்களின் போராட்டங்களைப் பற்றியோ எங்கே பேசப்போகின்றன?

ஒரே ஒரு கேள்வி

ஏழாவது கூட்டுச்சேரா மாநாட்டிற்குப் பின் உலக அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்ன?

1. ஒன்றுமில்லை. இந்தக் கூட்டுச்சேரா நாடுகளுக்குள் அடுத்த மாநாடு எங்கே நடத்துவது என்ற தீர்மானம் எடுக்கக்கூட முடியாமல் சண்டை போட்டுக் கொண்டனர்.

2. உறுப்பு நாடுகளான ஈரான், ஈராக் போர் நிறுத்தம் குறித்து ஓர் உடன்பாடும் ஏற்படவில்லை.

3. உறுப்பு நாடுகளுள் ஒன்றான கம்பூச்சியாவில் சீன ஆதரவு அரசும், உருசிய ஆதரவு அரசும் இருப்பதாகக் கோருகின்றன. இதில் எந்த அரசினை ஆதரிப்பது என்ற சிக்கலில்

மாநாட்டின் இரண்டு நாள்களை வீணடித்தார்கள். இந்திரா உருசிய ஆதரவாளர் மட்டுமல்லாமல், அயல்நாட்டு நடவடிக்கைகளில் உருசியாவின் கட்டளைகளுக்கு ஏற்ப நடப்பவர் என்பது வெளிப்படையாகத் தெரிந்த செய்தி. எனவே, இந்திரா பதவிக்கு வந்தவுடனே, பரபரப்புடன் உருசிய ஆதரவாளரான இங்கம் சாமுரின் தலைமையிலான அரசுக்கு ஏற்பு அளித்துவிட்டது.

அமெரிக்கா, கூட்டுச்சேரா மாநாட்டின் நடவடிக்கைகளைத் திணற அடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு கம்பூச்சியாவுக்கு இடம் ஒதுக்குவது என்ற தன் புனைத்திட்டத்தை ஆதரவு நாடுகளான தென் கிழக்காசிய நாடுகள் மூலம், குழப்பத்தை உண்டு பண்ணியது. இந்து மாக்கடலில் படைத்தளங்கள் அமைப்பதில் மும்முரமாகச் செயல்பட்டு வரும் அமெரிக்கா, இந்த மாநாட்டின் தீர்மானங்களைக் குறித்துப் பொருட்படுத்தவில்லை. மாறாக, டீகோ கார்சியா தீவிலிருந்து வெளியேற்றப்பட்ட ஏழைக் குடிமக்கள் ஏதிலிகளாக்கப்பட்டுப், பிலிப்பைன்சு நாட்டுக் கடல் பகுதியிலேயே, குடியேறவிடாமல் பல நாட்கள் தவிக்கவிடப் பட்டனர்.

நிக்கராகுவாவில் உருசிய பொதுவுடைமையின் மேவீடு பரவி உள்ளதால், அமெரிக்கா அதன் அண்டை நாடுகளைத் தூண்டி, ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியை இன்றும் எடுத்து வருகிறது: உள்ளே உருசியாவின் தொல்லை! வெளியே அமெரிக்காவின் தாக்குதல். வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் மூன்றும் உலக நாடுகளை வல்லரசின் விளையாட்டுப் பொம்மைகளாக்கிப் பார்க்கின்றனர்.

உருசியா கையகப்படுத்தியுள்ள, அதன் பேராளர் ஆட்சி நடத்தி வரும் ஆப்கானிசுதான் சிக்கலிலும் ஒரு விளைவுமில்லை. மாறாக, ஆப்கானிசுதானிலுள்ள மாணவர்களும், இளைஞர்களும் வலுக் கட்டாயமாக உருசியா கொண்டு செல்லப்படுகிறார்கள். அங்கு அவர்களுக்கு உருசியக் கொள்கைகளைப் புகட்டும் கட்டாயப் பயிற்சி வகுப்புகள் தொடர்கின்றன. அவை எதிர்ப்பவர்கள் ஆப்கானிசுதானில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பல்வேறு நாட்டு உருசிய ஆதரவுப் படைகளால் கொல்லப்பட்டு வருகின்றார்கள். இந்தியாவின் அண்டை நாடான ஆப்கானின் சிக்கலை இந்திரா பெரிதாக எண்ணவில்லை. மாறாக, அமெரிக்க இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூட, மிக்க கவனத்தோடு உருசியாவிற்கு எதிர்ப்பில்லாமல் கருத்துத் தெரிவிக்கிறார்.

இப்போது அடிமைப் படுத்தப்பட்ட ஆப்கானிசுதானின் எல்லைப் புறத்தில் இருந்து, விடுதலைப் படையினரின் கொரில்லாத் தாக்குதல்களைச் சமாளிக்க, அதிகப் படையை நிறுத்துவதோடு இல்லாமல், செருமனியைத் துண்டு போட்டுக்கொள்ள எழுப்பிய பெர்லின் மதிற்சுவர் போல, ஆப்கானிசுதானிலும் மதில் ஒன்று எழுப்பி வருகிறார்கள். ஆப்கானிசுதானிலிருந்து வெளியேறும் ஏதிலிகள் பாகிசுதானில் குடியேறுகிறார்கள். இது பாகிசுதானுக்கு ஒரு தொல்லையாகப் போய்விட்டது மட்டுமல்லாமல் உருசியா

வின் கைப்பற்றல் அச்ச உணர்வையும் ஏற்படுத்தி, அமெரிக்கா விடமிருந்து அதிக அளவு போர்க் கருவிகளைப் பெறுவதற்கு ஏந்தாகவும் ஆகிவிட்டது. 'கரகோரம்' பாதையை உருவாக்கிச் சீனவுடன் போக்குவரத்துத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டுள்ள பாகிசுதான், இந்திய-உருசிய உறவுக்கு ஓர் அறைகூவலாகவே உள்ளது. இவ்வாறு பொருளியலிலும் படைவலிமையிலும் பின்தங்கிய நாடுகள் வல்லரசுகளைத் தங்கள் சிக்கல்களுக்குத் துணையாக வைத்துக் கொள்வதின் மூலம், நாளடைவில் அவற்றின் பகடைக் காய்களாகி வருவதையும் வரலாறு உணர்த்தினலும், இந்த நாடுகள் உணரவில்லை.

எண்ணெய் விலையைக் குறைக்கவேண்டும் என்று அரபு நாடுகளிடம் கூட்டுச்சேரா மாநாடு கேட்டுக் கொண்டன. இந்த எண்ணெய் வள நாடுகள், கன்னெய் முதலிய எண்ணெய் விலையைக் குறைப்பதாகச் சொன்னலும், அதனல் பயனடையப் போவது அதிக அளவில் வாங்கும் பணக்கார நாடுகள்தாம். இந்த முன்னேற்றமடைந்த நாடுகளுக்காகத்தாம் இந்தக் கூட்டுச் சேரா மாநாடு டெல்லியில் பேரம் நடத்தியது.

டெல்லியில் நடந்த இந்த ஏழாவது மாநாட்டிற்கும் இதற்கு முன் கியூபாவின் இகவானவில் 1979-இல் நடந்த மாநாட்டிற்கும் உள்ள வேறுபாடு; ஆறுவது மாநாட்டின தலைவர் பிடல் காசிற்றோவின் உருசிய ஆதரவும், அமெரிக்க எதிர்ப்புணர்வும் கூட்டுச் சேரா நாடுகளின் இயக்கத்தையே ஒரு சார்புடையதாக்கிக் காட்டியது. கூட்டுச்சேரா நாடுகளைக் „கூ ட்டுடைமை நாடுகளின் நட்புப்பாகம், என்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என பிடல் காசிற்றோ கோரினர். ஆனல், அத் தீர்மானம் நிறைவேற்றப் படவில்லை.

இத்தகையதொரு தீர்மான முயற்சியை உணர்ந்திருந்த அமெரிக்கா இந்த் மாநாட்டிற்குத் தனது ஆதரவு நாடுகளை அணியப் படுத்தி அனுப்பியது. மாநாடு தொடங்குவதற்கு முன்பே, இந்திராவுக்கு மாநாடு வெற்றிபெற வாழ்த்துகள் அனுப்பியது. மாநாட்டில் நியூட்ரான் கருவிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை, அமெரிக்கா பொருட்படுத்தாமல் விட்டது. கூட்டுச்சேரா நாடுகளைப்பற்றி ஏளனமாக 'இரப்பாளர் நாள்கள்' என்றுதான் அமெரிக்காவின் "வாசிங்டன் போசுட்" பகடி இசய்துள்ளது.

இந்த மாநாட்டில் கருத்து வேற்றுமைகளாலும், வல்லரசுகளையே சார்ந்திருக்கும் தன்மையினலும் உறுப்பு நாடுகளின் சிக்கல்களைக் கூடத் தீர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை. வியட்நாமில் சீன - உருசிய மேலீட்டைப்பற்றி யாரும் அதிகக் கவலைப்படவில்லை. இவ்வாறு வல்லரசுகளின் மேலீட்டு அரசியலை ஒருமித்து எதிர்க்கத் திறனில்லாமல், கடமைக்காக நடந்த பயனற்ற மாநாடு இது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

—நன்றி: 'தேன்மழை', ஏப்பிரல்-1984.

தமிழகத்தில் நாளுக்கு நாள் வறட்சி மிகுகிறது. பருவ மழை பொய்க்கிறது. இவற்றுக்கெல்லாம் தலையாய காரணியம், மரங்கள் பெருமளவில் வெட்டிச் சாய்க்கப்படுதலே எனின் மிகையாகாது.

மனத்தை உறுத்தும் இன்னொன்று, பல பேரூர்களில் (கும்ப கோணம், கடலூர், விழுப்புரம்), புதை சாய்க்கடை இன்மையே. மக்களின் வரிப்பணம் எதெதற்காகவோ பாழடிக்கப் பெறுகின்றது. அறிவியல் அடிப்படையில் நந்தமிழர் சிந்திக்கத் தொடங்கிவிட்டால் மேற்கண்டவை (புதை சாய்க்கடை அமைத்தல், நல்ல தூய்மையான குடிநீர் வழங்கல், கொசு ஒழிப்பு, நோய்த்தடுப்பு) போன்ற திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்துமாறு மக்கள் அரசினரை நெருக்குவர்.

ஆகவே, இத்தகு துறைகளில் நம் தமிழர் சிந்தித்துச் செயலாற்றத் தக்கமுறையில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களில் (தக்காரைக் கொண்டு கட்டுரை எழுதுவித்து) வெளியிடவேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். நன்றி, வணக்கம். தங்களன்புள்ள, — அறங்க முருகையன், இலண்டன்.

0: 1091: அன்பு கனிந்த ஐயா! வணக்கம்! நீங்கள், மணப்பாறை உ.த.மு.க. தொடக்க விழாவிற்கு வருகை தந்து நல்லுரை நல்கியதற்கு எங்களின் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்களின் சொல்லும், செயலும், என்றும் உயர்வு எய்தும் என்பதில் ஐயம் இல்லை. உண்மைத் தமிழ்ப் புலவரின் சொல் பொய்யாகாது என்பதனைத் தங்களின் சொல்லில் இருந்து தான் அறிந்து கொண்டேன்.

என் குழந்தை தங்களால் பெயர் சூட்டப்பெற்ற குறிஞ்சி மலரை நீங்கள் தூக்கி முத்தமிட்டு அன்புகனிந்து கொஞ்சியது, என்றும் என் மனம்விட்டு நீங்காத இன்பக் காட்சியாக நிலைத்து நிற்கும்! நீங்கள் பல்லாண்டுக்காலம், வாழவேண்டும். தமிழினமும், தமிழும், நாடும் காக்கப்பெற வேண்டும்.

இன்று இனம், மொழி, நாட்டைக்காக்கும் வல்லமைச் சான்றோர் எவருமிலர். வாய்ச் சொல்லில் வீரரடி' என, சொல்லில் காணும் வீரம், செயலில் காண இயலாது. சூதும், சுரண்டலும், பொய்ம்மையும், களவும் மலிந்துள்ள இவ்வுலகில் உண்மையையே கூறி, கயமையிலும், அறியாமையிலும் இருந்து தமிழர்களை மீட்சிபெறச் செய்யும் தகைமை சான்ற சான்றோர் தங்களை விடுத்து யாருமில்லை.

தங்களின் உண்மைக் கருத்துக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்பதனை எம் மணவை வட்ட உ.த.மு.க. கூட்டத்தில் தான் அறிந்து கொண்டேன். தங்களின் சொல்லும், செயலும் உடல் நலமும் என்றும் சிறந்து விளங்க, தமிழ்த்தாயை இறைஞ்சுகின்றேன் நன்றி! அன்பன். தாழை. ந. இளவழகன், மணவை.

0: 1092: தங்கத் தமிழீழம் - தனித்தமிழகம்-படைக்க விலங்குகளை உடைத்தெறியும் வீர இளவல்களுக்கும் வீரம், அறிவுடன் ஒரு விடிவெள்ளியைத் தேடித்தரும், அஞ்சா நெஞ்சம் படைத்த பாவலரேறு ஐயா அவர்களுக்கு, அஞ்சி அஞ்சி வாழ்ந்துவிட்டு, அடக்குமுறையால் சரிந்துவிட்டு, ஐயாவின் பணியால் மலர்ந்துவிட்டு வீரம், அறிவோடு வாழ எண்ணிவிட்டுப் பொதுவாழ்வு கொண்டு தன் வாழ்வுவிட்டுத் தங்களின் தலைமையில் உயிர் துறக்க இருக்கும் இளமுகுந்தன் வரைந்த வரைவு.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் திரு. வாசுதேவா அவர்களின் சிறப்புரைக் கூட்டம்

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

6-4-1985 அன்று இரவு 7 மணியளவில் தாராபுரம் அண்ணா சீரணி அரங்கில் நடைப்பெற்றது. அதனைத் தொடர்ந்து தாராபுரம் பகுதிகளில் உள்ள அனைத்துச் சிற்றூர்களுக்கும் சென்று, இழிவுத்தனமான எமது உயிர்தான் தமிழீழ மக்களின் விடுதலைக்கு உதவும் என்றால் அந்தத் தலையையும் கொடுக்க இருக்கும் தோழர் சிவம், சிவபாலன், வசந்த், சுந்தர் ராசிம் ஆகியோர் தங்களுடைய போராட்டம் பற்றி விளக்கியும் அவர்களுடன் இளமுகுந்தன், தமிழ்வென்றி. செ. சண்முகம், சிரங்கராயன், சு. முத்து, பழனிச்சாமி ஆகியோர் உடன் இருந்தும், அலங்கியம், தளவாய்ப்பட்டினம், வீராச்சிமங்கலம் வெள்ளைக் கவுண்டன் வலசு, மேலும் பல பள்ளிகளிலும் கொடுக்கப்பட்ட பொருளைத் திரட்டி ஏறத்தாழ 20 ஆயிரத்துக்கும் அதிகமான தொகையைக் கொடுத்தும் உதவினோம். அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றில் தமிழீழத்தின் குரலின் செய்தி ஒலிபரப்பாளர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். — இளமுகுந்தன், பழனி.

0: 1093 : பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம். 'தமிழ நெஞ்சே' என்ற தங்களின் தென்மொழி உள்ளேட்டுப் பாடல் தங்களின் முயற்சிக்குரிய பயன் விளையவில்லையே என்று தங்கள் மனக்கவலையைக் காட்டுகிறது. முன்னாலே ஆமாம் போடும் உலகமிது-பின்னாலே நீயே போம் என்று எல்லா வகையாலும் புறந்தள்ளி விடுகிறது. 'காசின்றிக் கால் ஆள் பணிகூட அரசிடம் நீ வாங்க முடியாது' என்று கூறிவரும் அதிகாரிகளைத்தாம் நாமும் கண்டு வருகின்றோம்.

தங்களின் தனித்தமிழ் இதழ்கள் நடைபெறாமல் இருந்திருந்தால் தமிழுக்குக்கிடைக்க வேண்டிய நூல்கள் பல கிடைக்காமலேயே போயிருக்கும். தனித்தமிழ் இயக்கமே உயிரற்று வீழ்ந்திருக்கும் என்பதுண்மையே! தங்களின் வாணாள் பணியாக அவற்றை நடத்தி வருவதற்குத் தமிழினம் நன்றிக்கடன் பட்டுள்ளது. தங்களின் வரலாற்றுண்மை தமிழோடியைந்தது. தங்களின் கடந்த கால நிகழ்காலத் துன்பங்கள் தாங்களே உருவாக்கிக் கொண்டன வல்ல-சூழலால் உருவாயின என்று பொறுத்துக் கொண்டு, தங்களின் தமிழ்ப்பணி தொடரட்டும். நெல்லிக்காய் மூட்டைகள் நிரம்பியநாட்டில் பள்ளிதோறும் கல்விபாழாகி வருவது எதனால்? ஆசிரியப்பயிற்சி பெற்று உழைக்கத்தக்கவர்களைப் பணியமர்த்தம் செய்யாது ஏறத்தாழ பத்தாண்டுகட்கு மேலாக தமிழக அரசு வாளா இருந்து வருவதனால்..." 'கேடுவரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே!'. இப்படிக்கு உண்மையுள்ள,

— சி. நா. செந்தமிழ்ச்செல்வன், வேங்கைவாடி.

0: 1094 : பெருமப்பிற்குரிய பாவலரேறு ஐயா, அவர்களுக்கு வணக்கம். தென்மொழி சுவடி-21: ஓலை-8. வந்தது; கண்டுபடித்தேன். தாங்கள் எழுதிய 'பொதுவுணர்வுகளில் தமிழர்கள்' என்னும் சிந்தனைக்குரிய கருவூலத்தைப் படித்தேன். நடப்பியலில் கிடக்கும் குறைகளை ஆராய்ச்சி நோக்கோடு சுட்டியுள்ளீர்கள். பாவலர் இளஞ்சித்திரன் தந்த 'பாவாணர் பத்து' 'பா' சுவை கொட்டியது.

நாம் போடும் கூச்சல் தமிழனுக்குத் தாலாட்டுப் பாட்டாய்க் கேட்கிறது போலும்! அதனால் இன்னும் தூங்குகிறான். 'தமிழவேள்' அவர்களின் கட்டுரை அதனைப் படம் பிடித்துக் காட்டியது. — பாவலர் இராவணதாசன், சென்னை-23.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)